www.tamilarangam.net

raya

RAYA
67 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE : FRANCE

50

# தூண்டில்



Tamilische Zeitschrift

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




" இரண்டாவது பிறப்பு "
* *அருந்ததி* * 1990 * 29பக் * 6,-டி.எம் * Asseay, 3 Alles Paul Leautaud, 952oo Sarcelles, France.

*11 கவிதைகள்.*



" இனி ஒரு வைகறை "
* *கி.பி.அரவிந்தன்* * 1991 * 48பக் * 6,-இ. ரூபா * Ponny, 25 Arunasalapuram Main Street, Adiyar, Madras 2o, India.

*16 கவிதைகள்.*



" அகதி "
* *கௌரி* * 1991 * 90பக் * 3,-Ca$ * Social Research Circle 1477 Eglinton Ave West, Postbox: 3, Tronto, Ontariop M6E 2G6, Canada.

*நெடுங் கவிதை.*



" ராத்ரி "
* *இப்னு அஸூமத்* * 1991 * 24பக் * 20,-ரூபா * Thagar Veleyeeddagam, 156 Green Road, Trincomale, Sri Lanka.

*44 கவிதைகள்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# வந்தவர்கள் போகிறார்கள்!

பேர்லினுக்கு நானும், என் நண்பனும் போய்க்கொண்டிருக்கையில், நாங்கள் பிரயாணம் செய்த பெட்டியில் ஒரு ஜேர்மானியக் குடும்பமும் பிரயாணம் செய்தது. பிரயாண நேரம் சுமார் 6 மணித்தியாலங்கள். அக் குடும்பம் பார்ப்பதற்கு நல்லவிதமாகத் தெரியவே எங்களுக்குத் தெரிந்த ஜேர்மன் மொழியில் அவர்களுடன் உரையாடினோம்.

"நீங்களும் பேர்லினுக்கா போகிறீர்கள்?"

"நாங்கள் லிப்ஸிக்குக்குப் போகின்றோம்." லிப்ஸிக் என்பது முன்னாள் கிழக்கு ஜேர்மனியின் ஒரு நகரம்.

"அங்கு உறவினர்களிடம் போகிறீர்களா?"

"இல்லை. அங்கே போய் வாழப் போகிறோம்."

"கிழக்கு ஜேர்மனியில் வாழ முடியாது என்றுதான் எல்லோரும் மேற்கு ஜேர்மனிக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். நீங்கள் இங்கேயிருந்து அங்கே போகிறீர்களே?"

"நாங்களும் கிழக்கு ஜேர்மனியிலிருந்து இங்கே வந்தவர்கள் தான். 1989ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நாங்கள் குடும்பமாக கிழக்கு ஜேர்மனியிலிருந்து தப்பியோடினோம். அது மிகவும் பயங்கரமான அனுபவம். செக்கோசெலவாக்கியா, உங்கார்ன் ஊடாக முந்சனுக்கு தப்பி வந்தோம். படையின

www.tamilarangam.net

ரின் கண்களில் அகப்படாமலிருக்க காடுகள், வயல்கள், நதிகள் எல்லாம் தாண்டி குழந்தைகளுடன் வந்தோம். பல நாட்கள் பட்டினியாகவே பிரயாணம் செய்தோம்."

"ஏன் அங்கிருந்து தப்பினீர்கள்?"

"மிக மோசமான பொருளாதார நிலைமைகள்தான் காரணம். வீட்டின் தேவைகள் வளர்ந்தளவிற்குப் பொருளாதாரம் வளரவில்லை. எவ்வளவு உழைத்தும் எல்லாத் தேவையையும் பூர்த்திசெய்ய முடியவில்லை. கடைகளிலும் எல்லாப் பொருட்களும் கிடைக்குமென்றில்லை. எங்கள் நிலைமை இப்படி இருக்கின்றபோது அரசினதும், அரச குடும்பத்தினதும், அவர்களினது உறவினர்களினதும் வாழ்க்கைத்தரம் மட்டும் மேம்பட்டிருந்தது. இவற்றுடன் ஏதோ ஒன்றுக்குக் கட்டுப்பட்டிருப்பது போன்ற உணர்வே எங்களுக்கு இருந்தது. இவற்றிலிருந்து தப்ப 1989ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம்தான் சந்தர்ப்பம் கிடைத்தது."

"அப்படிக் கஷ்டப்பட்டுத் தப்பி வந்துவிட்டு இப்போது ஏன் பழைய இடத்திற்கே திரும்பிப் போகிறீர்கள்?"

"மேற்கு ஜேர்மனியைப் பற்றி நாங்கள் நிறையக் கற்பனை செய்திருந்தோம். இங்கு வந்து பார்த்த பின்புதான் தெரிகிறது நிலைமைகளில் பெரிதாக வித்தியாசமில்லையென்று. இங்கு ஒன்றும் வானத்திலிருந்து மகிழ்ச்சி கொட்டவில்லை. கடுமையாக உழைத்துத்தான் வாழ வேண்டியிருக்கிறது. இது புரியாததால் இன்னும் பலர் தொடர்ந்து இங்கு வந்துகொண்டிருக்கிறார்கள்."

"கிழக்கு ஜேர்மனியிலும் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும். இங்கும் அப்படியே என்று கூறுகிறீர்கள். பிறகு ஏன் திரும்பிப் போகிறீர்கள். இரண்டு பகுதியிலும் நிலைமை ஒன்றுதானே?"

"நாங்கள் மேற்கு ஜேர்மனிக்குள் காலடி வைத்தபோது எல்லையில் நின்று பூச்செண்டு தந்து வரவேற்றார்கள். புதிய உடைகள் தந்தார்கள். வரவேற்பு அன்பளிப்பு என்று ஆளுக்கு 100,-டி.எம் படி தந்தார்கள். மிகவும் அன்பாக நடந்தார்கள். கிழக்கு ஜேர்மனியில் நாங்கள் வாழ்ந்த வாழ்க்கையை கதைகதையாகக் கேட்டு பத்திரிகைகளில் பிரசுரித்தார்கள். தொலைக்காட்சியில் பேட்டி கண்டார்கள். எல்லாவிதமான கவனிப்பும் கிழக்கு-மேற்கு ஜேர்மனி இணைந்து, பொதுத் தேர்தல் நடக்கும்வரைதான். அதன் பிறகு எங்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகவே நடாத்துகிறார்கள். எங்களால்தான் தங்கள் வரி அதிகரித்துவிட்டது என்று எங்கள் மேல் கோபப்படுகிறார்கள்"

www.tamilarangam.net

"சுமார் இரண்டரை வருடங்களின் பின் திரும்பிப் போகிறீர்கள். முன்பு நீங்கள் வசித்த வீடு இன்னும் உங்களுக்காக இருக்குமா?"


"சென்ற மாதம்தான் நான் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். வீட்டில் எந்த ஒரு தளபாடமும் இல்லை. பலவற்றை அயலவர்கள் அபகரித்துவிட்டார்கள். இனி நாங்கள் அவற்றை உரிமை கோரமுடியாது. சில பெறுமதியான பொருட்களை நகரசபையே எடுத்து விற்பனை செய்துவிட்டதாம். வீடு மட்டும் அப்படியே இருக்கிறது. யாரும் அங்கு குடியிருக்கவில்லை."

"மேற்கு ஜேர்மனியில் உங்கள் எதிர்பார்ப்பு ஏமாற்றமாகியதில், திரும்பவும் பழைய இடத்திற்கே வருவதில் கவலையடைந்துள்ளீர்களா?"

"ஏமாற்றமடைந்தது உண்மைதான். ஆனால் எங்களின் இடத்திற்கே திரும்பவும் வருவதையிட்டு எங்கள் குடும்பத்தில் எல்லோருக்கும் சந்தோஷமே. என்னதான் இருந்தாலும் எங்கள் சொந்த வீட்டில் வாழ்வது போன்ற நிறைவு வேறு எங்கும் வராது"


கடைசியாக அக் குடும்பத்தின் தாய் கூறியது எங்கள் இருவரையும் ஏங்க வைத்துவிட்டது. எங்கள் நாட்டை நினைத்ததும் அரசும், இயக்கங்களும்தான் ஞாபகத்திற்கு வந்தன. நாங்கள் எப்போதுதான் இந்தக் குடும்பத்தைப் போல சொந்த வீட்டில் வாழும் நிறைவைப் பற்றிச் சொல்லுவோம் என்று எங்கள் இருவருக்கும் தெரியவில்லை.

- ரா.சி



Kölner Stadt-Anzeiger

www.tamilarangam.net



# நீதி கூற யாருமில்லை

** சுவர்ணாங்கி*

ஆதவனே வாரீரோ கோதையரைப் பாரீரோ !
சூரியரே கேளீரோ பெண்ணடிமை தீர்ப்பீரோ !!
நீதிக்காய் அழுகின்றோம் நீதி கூற வருவீரோ !!!

ஆதவனே நீயுமோர் ஆடவனே - இருந்தும் தீர்ப்புக்காய்
உமை மட்டும் இங்கழைத்தோம் — ஆதியிலே
தோன்றி வந்து யாவருக்கும் வழிகாட்டிச் சென்றதினால்
பெண் கொடுத்த உயிர் அவர்கள் - அவளை
அடக்கி இங்கு வாழ்கிறார்கள்.

பொறுத்தபோது ஆட்கொண்டான்.
பொறுக்கப் பொறுக்க ஆடுகின்றான்.
பாட்டில் கூட நஞ்சு வைத்தான்.
பாவையரை இகழ்ந்தே நின்றான்.

தேய்ந்து வரும் நிலவென்பான் - தெவிட்டுகின்ற
அமுதென்பான் - வாடி விழும் பூவென்பான்.
துவண்டு விழும் கொடியென்பான்.
வெடுக்கென்றறிந்தும் மீனினத்தை
பெண்ணவள் கண்ணுக்கு ஒப்பிட்டான்.

www.tamilarangam.net

பெண்ணுக்கென்ன உரிமையென வினவுகிறான் - அவனுக்கு
உயிர் கொடுத்த தெய்வமென்றால் மறுப்பானோ?
சலங்கைகள் அறுத்துவிட்டு கால் விலங்கிட்டான்.
கால்களையும் சிதைத்துவிட்டு அடுக்களையில் சிறையிட்டான்.
அலங்காரமிட்டவளை அடிமையாக்கி நின்றானே.
ஜவுளிக்கடை பொம்மையாக வைத்தானே.
விளம்பரத்தின் பதுமையாய் வரைந்தானே.

படுக்கையறைப் பாவையாக எண்ணுகிறான்.
அவளைக் குழந்தை பெறும் யந்திரமாய் மாற்றிவிட்டான்.
வேசையென்றும் தாசியென்றும் பேசுகின்றான்.
அதைத் தோன்ற வைத்த தன்னினத்தைத் போற்றுகின்றான்.

நாள் வைத்து - கோள் வைத்து
சாதகத்தைப் பார்த்துவிட்டு தாலியென்ற
கயிறொன்றை ஜாலியாகக் காட்டிடுவான்.
கட்டியவன் மூச்சு காலியானால்
தாலியதை அறுவென்பார்.
கொலுவெல்லாம் அகற்றென்பார்.
இறந்தவீடு சென்றுவிட்டால் ஒப்பாரி
வைக்கவிட்டுத் தாம்
ஒப்பனையாய் அமர்ந்திருப்பார்.

கோவலனுக்கு - சீதையினைத்
தீயிலிட்ட ராமனுக்கு - கானகத்து
காரிருளில் கட்டியவளை கைவிட்ட
நளனுக்கு சரித்திரங்கள் படைத்து நின்றார்.
இவர்கள் அந்தக் காலச் சரித்திர புருசர்களாம்.
இந்தகால புத்தகத்தில் பதிப்பிட்டார்.

கற்பென்று பொய்யுரைத்து சீதனமாய்
பகற் களவெடுத்து, பெண் கொலை செய்யும்
பாதகரை, வஞ்சகரை பார்த்தும்
இவை யாவும் சரியென்று சென்றாயே
ஆதவனே நீயுமோர் ஆடவனே அதனாலோ
ஆதரித்தாய் ஆடவனை !

www.tamilarangam.net

# சமூக முன்னோட்டமும், முற்போக்காளர்களும்

மனித சமூகம் பல மாற்றங்களினூடாக வளர்ந்து வந்துள்ளதை யாரும் மறுப்பதற்கில்லை. எனது சமூக அரசியல் அறிவுக்கெட்டியபடி "முற்போக்காளர்கள்" என்று சொல்லப்படுபவர்கள் சாதாரண மனித குண இயல்புகளுக்குத் தகுந்தாற்போல் ஒரு மரபு போக்குடையவர்களாகவே உள்ளனர். இவர்களில் விரல் மடித்து எண்ணக்கூடியவர்கள் சமூக அரசியல் போக்குகளை மிக அவதானமாக அணுகினாலும், ஒரு குழுநிலைப் போக்குக்குள் சிக்கிச் சீரழிந்ததே வரலாறு.

ஒரு இளைஞன் சிறு வயதில் தாய், தந்தையருடன் கோவில், குளம் என்று சென்று, பதினாறு வயதில் நாஸ்திகம் பேசிப் பின்பு, மார்க்ஸியம் பேசி தான் வாழும் சூழலில் தன்னை ஒரு மனிதனாக நிறுத்தப் பல தடைகளையும் தாண்டி 'ஒருவழி' அறிவுப் போக்கில் வளர்ச்சியடைகிறான். அந்த இளைஞன் அவன் சார்ந்த குடும்பப் பொருளாதாரத்தில் தங்கி நின்றே தனது அரசியலைப் பேசும்போது, உடல் உழைப்பில் இருந்து அந்நியப்பட்ட ஒரு சமூக அரசியல் போக்கு நீடிப்பது பெரும்பாலும் அசாத்தியமானது. ஆனால் மூளை உழைப்பாளிகள் ஊதியத்துடன் உழைத்தால் இப் போக்கு நீடிக்கும்.

இருப்பினும் இவர்கள் சொந்த (அக) அனுபவமின்றி வெளி அனுபவங்களைத் தொகுப்பதன் மூலம் சமூக உண்மைகளின் உணர்வுகளுடன் ஒட்டுவதில்லை. சில "புத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜீவிகள்" மேற்கூறிய அனுபவத்தை மிகவும் பெறுமதி வாய்ந்த உண்மை என்று நம்பி நடப்பார்கள். அவர்களும் ஒரு சமூக அரசியல் மாற்றத்தின்போது சலிப்படைந்து பழைய சமூக குண இயல்புகளுக்குப் பலியானதே நாம் கண்கூடாகக் கண்ட உண்மை.

75ஆம் ஆண்டுகளில் பல்கலைக் கழக மாணவர்களின் தொகையில் கணிசமானவர்கள் மார்க்ஸியம் பேசினர். இத் தத்துவமானது தர்க்க ரீதியிலும் சரி, வர்க்க ரீதியிலும் சரி உண்மைகளைக் கொண்டதும், மற்றவர்களால் நிராகரிக்க கஷ்டமானதும் என்ற அடிப்படையில் ஒரு நடைமுறை வேலையற்ற பல்கலைக்கழகக் கால ஸ்ரைலாக இது இருந்தது.

இக் காலகட்டத்தில் சீன, ரஷ்ய வண்ணக் கலர்களிலான அழகிய விளம்பரங்களுடன் கூடிய புத்தகங்கள் விற்பனையானதும், அதன் தாள்களில் உறை போடுவதும் அன்றைய காலகட்ட பாடசாலைகளின் மதிப்பான விசயமாகவும் மாறின. இந்தப் போக்கானது ஆய்வற்ற தன்மையால் ஒருவகையான ஏஜெண்டுகள் போன்ற தன்மைக்குள் இவர்களை இட்டுச் சென்றது என்றுதான் சொல்லவேண்டும்.

இது பொதுவான போக்காக இருந்தாலும் ஸ்தாபனமாக இயங்கிய "முற்போக்காளர்களும்" தேசிய இனப்பிரச்சினையில் எந்தளவிற்கு நம்பிக்கை கொண்டிருந்தனர், சமூக வர்க்க முரண்பாடுகள், தேசிய இனங்களின் முரண்பாடுகள் பற்றி அக்கறை கொண்டிருந்தனர் என்பவை கேள்விக் குறியாகக்கூட இருக்கவில்லை. ரஷ்ய சார்பு "முற்போக்காளர்கள்" இலங்கைப் பாராளுமன்றவாதிகளாக இருந்தனர். சீனச் சார்பு "முற்போக்காளர்கள்" பாராளுமன்றத்தை நிராகரித்து, தேசியப் பிரச்சினை சாதியம் மட்டுமே என்றிருந்தனர். இவர்களின் இந்தப் போக்கானது நான் முன்பு கூறிய மாதிரியே சமூக உண்மைகளின் உணர்வுகளை பிரதிபலிக்காத தன்மையைத்தான் காட்டியது.

இது இவ்வாறிருக்க, தமது பிரச்சினையே தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை என்ற கோட்பாட்டுக்குள்ளிருந்த த.வி.கூ. வின் அரசியல் போக்கு சந்தர்ப்பவாதப் போக்காகும். அவர்களின் வர்க்கக் குணாம்சம் காரணமாக - சாதியப் பிரச்சினையை நடைமுறையில் கடைப்பிடித்துக்கொண்டு சாதியம் என்றொரு சாமான் இல்லை என்று சொன்னதைப்போல - தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு தமிழீழம் என்றனர்.

இந்த எதிரும் புதிருமான போக்குகள் நிலவியபோதும், இலங்கையரசின் இனவொடுக்கல்,

www.tamilarangam.net

இனவழிப்பு, பிரதேச கபளீகரம் ஆகிய வேலைகளும் அதே காலகட்டத்தில் நடந்ததை எவரும் மறுக்க முடியாது. இந்த இனவொடுக்குமுறைக்கும், இனவொழிப்புக்கும் எதிராகப் போராட வந்த தமிழ் இளைஞர்களின் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி தமது அடியாட்களாக கூட்டணி வைத்திருந்தது. இந்நிலையில் சீனச் சார்பு "முற்போக்கானர்களின்" நடவடிக்கைகள் இந்த இளைஞர்களை மிகவும் ஆத்திரப்படுத்தியது. சுயேட்சை வேட்பாளர்களை துரோகிகள் என்று அழித்த காலகட்டமும் இதுதான்.

சிறிதுகால இடைவெளியில் த.வி.கூ தலைமைகளில் வெறுப்படைந்த இளைஞர்கள் தமது சொந்தப் போக்கில் ஸ்தாபனம் அமைத்துக் கொண்டனர். தமிழீழம், ஈழம் போன்ற போக்கானது எல்லாவிதமான சிந்தனையாளர்களையும் உள்வாங்கக்கூடிய ஒரு தனித்தன்மையைக் கொண்டிருந்தது.

ஆரம்பத்தில் மனப்பாடம் பண்ணப்பட்டிருந்த சமூக விஞ்ஞானம் இந்தக் காலகட்டத்தில் சமூகத்துடன் இணையத் தொடங்கியது. இருப்பினும் தமிழ் இயக்கத் தலைமைகள் த.வி.கூ.வை நிராகரித்தனர். ஆனால் இந்திய அரசை ஏற்றுக்கொண்டனர்.

தலைமைகள் தமது இருப்பை இந்தியாவில் அமைத்துக்கொண்டிருந்தமையினால் தளநிலைமைகளை அதிசயக் கதைகள் போலக் கேட்டனர். தள இளைஞர்களோ முற்போ



*"அகதியன் தொடந்தும் ஜேமனிக்கு வரவேணும், மனிதாபிமான முறையிலை இதை அனுமதிக்க வேணுமெண்டு சொல்லியிருக்கிறாரோ? ஆரான் றெட்குறொஸ்காறனோ?"*

*"இல்லை. கொன்ரெய்னர் வீடுகள் செய்யிற கொம்பனி முதலாளி. ஒரு கிழமையிலை மட்டும் 150 வீடுகள் செய்ய ஓடர் கிடைச்சிருக்காம்"*

*- இன்னன்னா*

www.tamilarangam.net

க்குச் சிந்தனையில் நம்பிக்கை இழக்காவிடினும் "முற்போக்காளரின்" போக்கில் நம்பிக்கை இழந்திருந்தனர்.

தமிழரசுக் கட்சி தனது கடந்த காலப் போராட்டத்தைப் பேசி பேசிக் கூட்டணியாகும்வரை உயிர் வாழ்ந்தது. அதுபோல் அறுபதுகளில் சாதியப் போராட்டத்தின் வெற்றிகளை வீர முழக்கமிட்டுக் கொண்டு சீனத் தலைமைகள் மாவோவின் இறப்புவரை உயிர் வாழ்ந்தனர்.

இவர்கள் மத்தியில் காணப்பட்ட பிழைப்புவாதப்போக்கானது உடைவை இவர்களுக்குள் ஏற்படுத்தியது. தத்துவம் சார்ந்த போக்கு இவர்களிடம் கூடவே இருந்த போதும், அந்தத் தத்துவம் சமூகத்துடன் இணையாது, தனித்து நின்ற போது உயர் சமூகத்திலிருந்து வந்த இளைஞர்களிடம் புதிய ஆயுதப் புழக்கம் சாதாரண விசயம் ஆகிவிட்டது. பல இளைஞர்களின் தலைமறைவு வாழ்க்கையும் தொடரத் தொடங்கிவிட்டது. இதன் காரணமாக பழைய பாணியிலான சாதியப் போராட்டம் செய்வது நடைமுறைச் சாத்தியமற்றதாகியது. இதே வேளை தாழ்த்தப்பட்ட-ஒடுக்கப்பட்ட உழைப்பாளி மக்களின் பகுதியிலிருந்து நிறைய இளைஞர்கள் தமிழ்த் தேசிய அலையில் இழுபட்டனர். எனினும் "முற்போக்குப்" பேசியவர்கள் பல உலகநாடுகளை உதாரணங்களாகக் கூறி தமிழீழம்/ஈழம் சாத்தியமற்றது என்றே கூறினர். இப்போதும் கூறுகின்றனர்.

80களின் பின்பு தமிழீழம் சாத்தியமில்லை என்ற குரல் எழவே வாய்ப்பு இருக்கவில்லை. இந்தியாவின் வரவின்போதும், அதன் முன்பும் தேசியத் தலைமைக்கான குத்துவெட்டுகள் நடக்கத் தொடங்கிய வேளையே தமிழ்த் தேசியப் போக்கானது ஆயுதம் தாங்கிய அடக்குமுறைப் போக்குக்குள் பிரவேசித்தது. இக் காலகட்டத்தில் சமூக உண்மைகளின் உணர்வுகளைப் பிரதிபலித்த "முற்போக்குச்" சிந்தனையாளர்கள் - தமிழ்த் தேசியப் போக்குள் உள்வாங்கப்பட்டவர்கள் - கருத்துச் சுதந்திரம் இன்றி விழித்தனர். ஒதுங்கவும், வெளியேறவும் செய்தனர்.

இது தவிர, சமூக விஞ்ஞானப் போக்குடைய பல சிறிய அமைப்புகள் சுயமாக இயங்கியபோதும் இவர்களுக்கு இந்திய உதவி மற்றைய அமைப்புகளுக்கு கிடைத்தது போல் கிடைக்கவில்லை. இந்திய அரசின் நோக்கங்களுக்கு இரையாக மறுத்ததும் இச் சிறிய அமைப்புகள் வளரமுடியாமைக்குக் காரணம் என்று சொல்வதே சரியென நினைக்கின்றேன்.

80களுக்கு முன்னும், பின்னும்

www.tamilarangam.net

தமிழ் இயக்கங்களிலிருந்து விலகிய சமூக விஞ்ஞானக் கண்ணோட்டம் உள்ளவர்கள் புதிய அமைப்புகளை உருவாக்க இயக்கங்கள் ஒருபோதும் அனுமதித்ததில்லை. இந்த விடயத்தில் எல்லாத் தமிழ் இயக்கங்களுக்கும் ஒரு உடன்பாடிருந்தது.

90இல் தமிழீழம் என்ற போக்குடையவர்கள் ஈழம் என்ற போக்குடையவர்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தமையும் தெரிந்ததே. தற்போது கொழும்பில் அரசியல் கடைகளை இலங்கையரசின் உதவியுடன் அமைத்துள்ளவர்களில் நான் முன்பு கூறிய "முற்போக்காளர்களும்" அடங்குவர். கடந்த காலத்தில் இந்தியாவில் இந்த இயக்கங்கள் இருந்தபோது பேசித் தீர்க்க முடியாத விடயங்களா கொழும்பில் பேசித் தீர்ப்பதற்கு? அல்லது இப்போதும் தமது தனித்துவத்தைக் காக்கச் சாகும் வரை தம்மை மார்க்ஸிஸ்டுகள் என்று கூறிக்கொள்வார்களா? என்பது அவர்களுக்குத்தான் தெரியும்.

80களுக்கு முன்னும், பின்னும் வெளிநாடுகளுக்கு வந்த "முற்போக்காளர்கள்" பலவிதமான குழுக்களில் ஆதரவாளர்கள், அங்கத்தவர்களாயிருந்தவர்கள். பலரும் தாம் நாட்டைவிட்டு வெளிக்கிட்ட காலகட்டத்திலிருந்த குழுக்களின் இருப்பையே கொண்டுள்ளனர். சண்டை நாட்டில் நடக்கவேண்டும் என்பதில் மற்றைய தமிழர்களினின்றும் வேறுபட்டாலும், தமிழின ஒடுக்குமுறையாலும், அழிப்பினாலும் பாதிக்கப்பட்டவர்கள் என்றே அரசியல் தஞ்சத்திற்கான வாக்குமூலத்தில் சொல்லியுள்ளபோதும், சாதாரண வாக்குவாதங்களில் மரபுவாதிகளின் கிளிப்பிள்ளைத்தனத்தைக் காணக்கூடியதாயிருக்கிறது. இந்த "முற்போக்காளர்கள்" உலக அரங்கின் அரசியல் மாற்றங்களிலிருந்து பல படிப்பினைகளைக் கற்கவேண்டும் என்று சொல்லுபவர்கள். அந்த நாடுகளின் தேசிய இனப்பிரச்சினைகளின் முக்கியத்துவங்கள் பற்றி பேசுபவர்கள் ஏன் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையை விளங்கிக் கொள்ள முடியாதவர்களாக இருந்தார்கள் என்பதைச் சற்றுச் சிந்திக்க வேண்டும். பிழைப்புவாதிகள் தாங்கள் சொந்த நலன்களுக்கு ஒருபோதும் தீங்காக நடக்க மாட்டார்கள். இந்த விசயத்தில் இவர்கள் அறிவாளிகளே!

*(அடுத்த கலத்தில் முடியும்)*

– சாந்தன்

---

ஏப்ரல் மாத

## இரவல் தூண்டிலில்...

* "இங்கே இருந்தால் சித்திரவதை! அங்கே போனால் படுகொலை!" – இந்தியாவிலிருந்து இலங்கைக்கு நாடுகடத்தப்பட்ட ஈழ அகதிகளின் கண்ணீர் பேட்டி.

www.tamilarangam.net

# ஏனிந்த வித்தியாசங்கள் ?



லொவி மரத்தினில்
ஏறிக்கொள்ளவும்
நல்ல பழங்களை பிடுங்கியுண்ணவும்
இனி எனக்கு விலக்கப்பட்டுள்ளதாம்.
நான் இனி வளர்ந்த பெண்ணாம்.

மணற்குவியலில் புரளவும்
தம்பியுடன் சண்டை பிடிக்கவும்
இனி என்னால் முடியாதாம்.
நான் இனி வளர்ந்த பெண்ணாம்.

தோழிகளோடு கூடியிருக்கவும்
வெளிக் கிணற்றினில் அள்ளிக் குளிக்கவும்
இனி எனக்கு விலக்கப்பட்டுள்ளதாம்.
நான் இனி வளர்ந்த பெண்ணாம்.

பள்ளிக்கு முழுக்குப் போடவும்
வீட்டு வேலைகள் தெரிந்து கொள்ளவும்
விரைவில் எனக்கு ஏற்படுமாம்.
நான் இனி வளர்ந்த பெண்ணாம்.

www.tamilarangam.net

பெற்றோரைத் திருப்தித்து
விருப்பமில்லா மணஞ் செய்ய
விரைவில் எனக்கு ஏற்படுமாம்.
நான் இனி வளர்ந்த பெண்ணாம்.

கணவனுக்கு விசுவாசியாய்
பதிவிரதையாவதற்கும்
இல்லாவிடின் தவறாமல்
அடியுதைகள் வாங்கிடவும்
பெண்ணென்ற காரணத்தால்
ஏனிந்த வித்தியாசங்கள்?

இப் பொய்மையைச் சகித்துக்கொள்ள
இனியுமென்னால் முடியவில்லை.
பெண்ணிற்கான சமவிடம்
இவ்வுலகினில் கிடைக்க வேண்டும்.

சகோதரிகளே எழுங்கள்.
பயம்விடுத்து முன்னேறுங்கள்.
மௌனத்தை உடைத்தெறியுங்கள்.
கண்களைத் திறவுங்கள்.
இப் பிராமணச் சட்டங்களை
விரட்டியடியுங்கள்.


எங்களுக்கான சமவிடத்தை
விட்டுக்கொடாமல் கேளுங்கள்.

சோர்வின்றி ஒன்றாகினால்
விடுதலை எம் கைகளில்தான்.

அறிவீரா நாம் பெண்கள்.
நாம் பெண்களாதலினால்
முடியாதது எது நம்மால்?

*
மல்லிகா

www.tamilarangam.net



## ஈழத்திலிருந்து ஓர் துண்டுப்பிரசுரம்: 3

# முடிவு எப்போது ?

டிசம்பர் மாதத்தின் இறுதி வாரம்.

வழமைபோல தனது புத்தகக் கடையில் வீட்டுக்குத் தேவையான மரக்கறிச் சாமான்களை வாங்கி வந்து வைத்துவிட்டு வியாபாரத்திற்காக உட்கார்ந்திருந்தார் அவர். சில நிமிடங்களில் ஆயுதமேந்திய சில புலி வீரர்கள் சைக்கிளில் வந்து குதித்தனர். யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலிருந்த அந்தப் பழைய கடைத் தொகுதியிலிருந்த இந்தப் பிரபலமான - ஆனால் முக்கி முனகி இயங்கிக்கொண்டிருந்த - புத்தகக்கடைக்குள் அவர்கள் நுழைந்தனர்.

புத்தகங்களை விற்பது ஒரு பணம் தரும் வியாபாரமாக இருந்த முன்னைநாள் யாழ்ப்பாணம் அல்ல இது இன்று. புத்தகங்களைப் படிக்க நேரமில்லாமல் தமது அன்றாட ஜீவனோபாயத்திற்காக அழவேண்டியது ஒருபுறம். இந்தக் குறிப்பிட்ட கடையின் புத்தகங்களைப் படிப்பது தேசத் துரோகமாகக் கருதப்படுமோ என்ற அச்சம் மறுபுறமுமாக புத்தகங்கள் விலை போகாத ஒரு புத்தகக்கடையாக அது மாறிவிட்டது.

அந்தப் புத்தகக்கடைதான் "யாழ் புக் ஹவுஸ்".

நுழைந்தவர்கள் புத்தகங்கள் படிப்பதற்கே என்பதை அறியாதவர்கள் என்பதால் விடயம் வேறு என்பது வியாபாரத்திற்காக உட்கார்ந்திருந்த அவருக்குத் தெரிந்தி

www.tamilarangam.net

ருந்தது.

சீன உளவாளி என்றும் இன் னோரன்ன வேறு அடைமொழிகளா லும் அழைக்கப்பட்ட முன்னைநாள் கொம்யூனிஸ்ட் கட்சியின், உறுதி குலையாத ஒரு கொம்யூனிஸ்ட் அவர். தேசத்தினதும், மக்களின தும் விடுதலையில் ஆர்வமும், அக் கறையும் கொண்டிருந்தபோதும் நடைமுறையிலுள்ள 'அரசியற் பாதையில் நம்பிக்கை அற்றிருந்த' காரணத்தால் 'துரோகிகளில் ஒரு வராக இருக்கக்கூடுமோ' என வழமைபோல அநியாயமாகச் சந் தேகிக்கப்பட்டவர் அவர்.

அவர் வேறு யாருமல்ல.

அறுபதுகளில் தீவிர கொம்யூ னிஸ்ட்டும், போராளி பத்திரிகை யின் முந்நாள் ஆசிரியரும், எழுபது களிலும், எண்பதுகளிலும் பலரா லும் மதிக்கப்பட்ட அறிவாளிகளில் ஒருவருமான மணியண்ணைதான் அவர்.

மாற்றுக் கருத்தாளரையும் மதி க்கத் தெரிந்த பண்பாளரான அவர் ஒரு குழந்தைக்குத் தந்தை. ஒன் றரை வயதான பெண் குழந்தைக் குத் தகப்பனான அவர் தனது குடு ம்பத்தின் நிலை பற்றி எடுத்துக் கூறியது எப்போதும் போலவே புலிகளுக்குக் கேட்கவில்லை.

அறுபதுகளில் அரசியற் காரண ங்களுக்காக பல்கலைக்கழகப் படி ப்பை உதறிவிட்டு முழுநேர கொம் யூனிஸ்ட்டுக் கட்சி(மா-லெ) உறுப் பினராகிய மணியண்ணை தொழி லாள விவசாயிகளின் விடுதலைக் காக தன்னை அர்ப்பணிக்க எந் நேரமும் தயாராக இருந்த ஒரு தேசபக்தன்.

"விசாரணைக்காக" புலிகளால் அழைத்துச் செல்லப்பட்ட மணி யண்ணை எதிர்பார்த்ததுபோலவே இன்றுவரை விடுவிக்கப்படவில்லை. இலங்கையின் இனவெறி அரசு, இந்திய மேலாதிக்கம் என்பவ ற்றை உறுதியாக எதிர்த்த அவர் மக்களின் சனநாயகம், விடுதலை என்பவற்றின் அவசியம் தேசவிடு தலைக்கு ஒரு தவிர்க்க முடியாத முன்நிபந்தனை என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்த வர் என்பது மட்டுமே அவரது "துரோகம்".

அண்மைக்கால கைதுகளான கேசவன் முதல் செல்வி, தில்லை நாதன் வரையான கைதுகளில் இவர் பதின்மூன்றாவது நபர்.

கடத்தப்பட்டதிற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. அப்படித் தெரிவிப்பது அவசியம் என்ற அம் சம் புலிகளின் அகராதியில் ஒரு போதும் இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனிதர்களது சிந்தனைகளை நசுக்கித் தாம் நினைப்பதைப் பேசுவதே தேசபக்தி என்று சாதிக்கும் "விடுதலைப்"புலிகளது போராட்டம் தேடித் தந்திருப்பது அராஜகத்திற்கும், அடக்குமுறைக்கும், மனிதப் படுகொலைகளுக்குமான சுதந்திரத்தையே.

தேசத்தின் வாயை மூடிட நினைக்கும் புலிகளுக்கு ஒரு வார்த்தை: இதை முடுவதற்கு உள்ள ஒரே வழி முழுத் தேசத்தின் மக்களையுமே கொன்றுவிடுவதுதான்! அதைச் செய்யுங்கள். பின்னர் மனிதர்கள் இல்லாத தேசத்தில் புலிகள் மட்டுமே உறுமும் விடுதலை வாங்கித் தந்த பெருமை உங்களுக்குச் சேரும்.

உலகெங்கும் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களே....

கேசவன்.. செல்வி.. தில்லை.. வரிசையில் இன்று புதிதாக மணியண்ணை. இன்னும் எத்தனை பேரோ? இந்த மனிதப் படுகொலைகளுக்கு முடிவு கட்டுவது எல்லோரும் அழிந்த பின்பா?

- நண்பர்கள் (ஈழம்)

---

எந்நேரத்திலும் கொல்லப்படக் கூடிய சூழலிலிருந்து வரும் இப்பிரசுரத்தை இயன்றவரை எல்லோருக்கும் கிடைக்கச் செய்யுங்கள்.

## " இ.போ.ச. வின் கதை ! "

1.இலங்கைப் போக்குவரத்துச்சபை



2.மத்திய போக்குவரத்துச்சபை



(தொடர்ச்சி 77ஆம் பக்கம்)

www.tamilarangam.net

# எங்கும் பிரசைகளிற்கு...



அந்தரத்தில் அலறும்
ஈனக் குரல்வளைகள்
பாலில நசிவில் பதறும்
பச்சிளங் குழந்தைகள்.

பரிந்து பேசின் துரோகமென்பர்.
மறந்து வாழின், தேசியமென்பர்.

மானுட அழிவில் மதம் கொள்
மந்தையர் கூட்ட விடு - தலை
மண்டையோட்டு மயானமின்றி
மாவீரர் வாழ் செழுநிலமாம் !

உயிரினை மதிக்கும் உணர்விலான்
தலைமை வெறி கொள் போரில்
தாக்கலும், தடுத்தலும்
தரத்தினி லொன்றே.

www.tamilarangam.net

மக்கள் அழிவில் மகத்துவம் பரப்பி
மயக்கும் பேச்சில் மழலைகள் விழ
மதி செய் தகுயிலா பெற்றோர் வாட
வீரம் பல செய்குவர் இப் பரணியிலே
இங்கே -

தத்துவ வித்தகர் தாகர் கூட்டம்
தலை பிய்த்து மயிர் பிளக்க
முத்திப் பரவச மோன நிலையில்
மார்க்சிய ஞானப் பார்வையினாலே
சகலமும் விளக்கும். விதண்டம் பிளக்கும்.

மார்க்ஸின் மனிதத்துவமறியா நுனிப்
புல் மேய்ந்த மேய்ச்சல் கூட்டம்
வர்க்க விடுதலை பேச்சால் செய்யும்
தர்க்கம் புரிந்து மார்பினில் தட்டும்

தோற்பது முடியா வெல்வது கடினம்
தோற்றத்தில் தேசியம் ஊசலில் முதலாளித்துவம்
சரியும், பிழையும் சகலதும் அதுவே
அதுவும், இதுவும் இரண்டுமிருக்கும்.

நசிந்து, பிசைந்து கசக்கிப் பிழிந்து
காரணம் கூறும் காலம் தள்ளும்
ஆனால் -
மாவீரர் அவர்கள் மக்களெதிரிகள்
வரலாற்றின் கோழைகள் மானுடத் துரோகிகள்
வெடிப்பு நகர்ந்து கீற்று நுழைய
அகலுமிருளில் மெய்மை புரியும்
சிதறும் தேசத்தின் எஞ்சும் பிரஜைகளிற்கு.

*

ஏடன் பி.சந்தியாகோ (ஈழம்)

www.tamilarangam.net

# புலிகளிடம் 2 அம்சங்கள்!

தமிழ்த் தேசியமானது சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராக உருவாக்கப்பட்ட ஒன்றாகும். தனிச் சிங்களச்சட்டம், தரப்படுத்தல், தொழில்-கல்வியில் இனப் பாகுபாடு, திட்டமிட்ட குடியேற்றம், பொருளாதாரப் பாகுபாடு, மலையக மக்கள் வாக்குரிமை பறிப்பு என்பவையே தமிழ்த் தேசியம் உருவாகுவதற்குக் காரணமாக அமைந்தவையாகும்.

தமிழ்த் தேசியம் குறுகிய தேசியவாதமே. அது யாழ்-இந்து-சாதிய எல்லைக்குள்ளேயே உள்ளது. இந்த எல்லையைக் கடந்து ஒரு விரிவான தேசியம் இன்னும் உருவாகவில்லை.

இக் குறுகிய தமிழ்த் தேசியம் ஆரம்பத்தில் அஹிம்சை, பாராளுமன்றம், இணக்கம் என மாற்றம் கண்டு இறுதியில் தவிர்க்க முடியாமல் ஆயுதப் போராட்ட வடிவம் எடுத்துள்ளது. இவ்வாயுதப் போராட்டத்தை பல அமைப்புகள் முன்னின்று நடத்தியபோதும், அவற்றினிடையே உறுதியான அரசியலின்மை, போலியான பெருமை, மக்கள் நிலையைப் புரிந்துகொள்ளாமை போன்றவற்றால் போட்டி, பூசல்கள் ஏற்பட்டன.

ஒன்று மற்றையதை மிஞ்சிவிடுமோ என்றளவிற்கு புலிகளின் மேலாதிக்கப்போக்கு மேவிட, மற்றைய அமைப்புகளைப் புலிகள் தடை செய்து தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக்கொண்டன. புலிகளின் தேசியம் ஏனைய சிறுபான்மை

www.tamilarangam.net

இனங்களை ஒடுக்கும் அளவிற்கு குறுகியதாக உள்ளது. எனவே புலிகளின் நடவடிக்கைகளை அவதானித்தால் –

1) ஜனனாயகமின்மை
2) மேலாதிக்கம்
3) ஏனைய சிறுபான்மை இனங்களை ஒடுக்கல்
4) மக்கள் விரோதச் செயற்பாடுகள்
5) சுய உற்பத்தியில் ஆர்வம் காட்டாமை

– போன்றவை புலிகளைத் தேசிய சக்திகள் என்பதைவிட பாஸிஸ சக்திகள் என்றே நம்புமன விற்குன்னன.

ஆனால் இச் செயற்பாடுகளை மட்டும் கருத்திலெடுத்து புலிகளை மதிப்பீடு செய்யமுடியாது. ஏனென்றால் இன்றைய யுத்தத்தில் புலிகளுடைய செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதும் அவசியமானது.

இலங்கைப் பேரினவாதத்திற்கு எதிராக ஆயுதம் தாங்கிப் போராடும் ஒரே அமைப்பு இன்று புலிகள் தான். மற்றைய இயக்கங்களோ பேரினவாதத்தினையே மறந்து பிரேமதாசாவின் வாலைப் பிடித்துக்கொண்டு நிற்கும்போது, புலிகளின் செயற்பாடு வரவேற்கத்தக்கதே.

அடுத்து, இந்திய மேலாதிக்கம் தமிழ்மக்களின் விருப்பத்தினையே கருத்திற்கெடுக்காது, தன் அதிகாரத்தினை நிலைநாட்டும் வற்புறுத்தலில் ஒரு உடன்பாட்டைக் கொண்டு வந்தபோது – அதனுடன் சமரசம் செய்யும் போக்கு இருந்தபோதும் – அந்தப் பெரிய வல்லரசை எதிர்த்துப் போராடிய அமைப்பு புலிகளே. அந்த யுத்தத்தைப் புலிகள் தான் தொடங்கினார்கள் எனக் குற்றம் சாட்டுவது பிழையானது. ஏனென்றால் இலங்கைப் பேரினவாத அரசு இந்திய இராணுவத்தை அனுப்புவதற்கு புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கியும் இருக்கிறது.

இங்கு சமரசம் இருக்கமுடியாது. காரணமில்லாமலே யுத்தம் தொடங்கியிருக்கும். அந்த வகையில் புலிகள் முந்திக்கொண்டார்கள் என்றே பார்க்கவேண்டும்.

எனவே புலிகளிடம் இரண்டு அம்சங்கள் உண்டு என்றே பார்க்கலாம்.

1) தமிழ் மக்களின் தேசிய அபிலாசையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தமிழ் மக்கள் சார்பாக மோசமான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து தமிழ் மக்களின் நலனுக்கு விரோதமாய் உள்ளது.

2) இன்றைய நிலையில் இலங்கைப் பேரினவாதத்திற்கு எதிராக ஆயுதம் தாங்கிய ஒரே அமைப்பாக உள்ளது.

இந்த மதிப்பீட்டால் புலிகளை

www.tamilarangam.net



*"எங்கடை இயக்கம் செய்யிற அநியாயங்களைத் தெரிஞ்சு கொண்டு தானே அவன் காசு சேக்க எங்களோடை வந்துகொண்டிருந்தவன். இப்ப ஏன் வரமாட்டானாம்?"*

*"ஊரிலை அவன்ரை வீட்டிலயும் எங்கடையாக்கள் தங்கடை கைவரிசையைக் காட்டியிட்டினம்"*

*– இன்னன்னா*

வெறுமனே தேசிய சக்தி என்று பார்ப்பதைவிட, அதற்கும் மேலாக அதன் பாலில செயற்பாடுகளும் காணப்படுவதால் முழுதாகவே தேசிய சக்தி என ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே எனது கருத்து.

ஆனால் மாற்று அமைப்பு இல்லாத நிலையில் புலிகளைத் தேசிய சக்தி எனவும் பார்க்கலாம்!

கு.பத்மலோசனி (ஈழம்)

# பிரஜைகளின் முடிவிற்கு...

கடந்த பலமாதங்களாக "தேசியத்தின் குறிப்பாக" தேசத்தின் குறிப்புகள் வந்தபோது, அதன் அறிவார்ந்த வாதங்களையும், தேடலையும் தமிழ்ச் சமுதாயத்தின் தேவையெனக் கருதி, அதன் மீது மிகவும்

www.tamilarangam.net

கவனஞ்செலுத்தி வாசித்து வந்தோம்.

"தேசத்தின் குறிப்புகள் பிற்போக்குத் தேசியம் பேசுகிறது, புலிக்குக் காவடி தூக்குது" என்றெல்லாம் பலர் புலம்பியபோது, அதன் சில கூறுகளை வைத்து எடைபோடாது கவனமாக, மௌனமாக இருந்தோம். எனினும் அதன் பயனுள்ள பல கூறுகளை எமக்கு மிகவும் வேண்டியவர்களுடன் விவாதித்தும் வந்தோம். ஆனால் கலம் 49இல் வந்த குறிப்புகள் மிகவும் வேதனையையும், விரக்தியையும் கூட்டிவிட்டன.

இன்றைக்கு நாமிருக்கின்ற சூழ்நிலையில் அறிவை வளர்த்துக் கொள்ள, வரலாற்றைப் புரிந்து கொள்ள மொழி தடையாக ஒரு புறம். மறுபுறம் தாய்மொழியில் இயலக்கூடிய நூல்களைப் படிக்க முடியாத அவலம். இதற்குள் அகப்பட்டு நம்மிடமிருந்த அறிவுப்பரப்பையுமிழந்து, படித்துச் செரித்தவற்றையுமிழந்து வெறும் ஜடமாக வீடும், வேலையுமாக முடங்கிவிட்டோம். இந்நிலையில் எதையும் விமர்சிக்க முடியாத நிலையில், மிகவும் அறிவு மங்கிய அவல நிலையிலிருந்துகொண்டு, நாம் கற்றுச் செரித்த அறிவின் துணையுடன் தேசத்தின் குறிப்பு மீது சில கருத்துகளை முன்வைக்க முனைகின்றோம்.

1852ஆம் ஆண்டில் கார்ல் மார்க்ஸ் எழுதிய "The eighteenth brumaire of louis bonaparte" எனும் நூலை ஒன்றரை நூற்றாண்டு இடைவெளிக்குப்பின், நவகாலனித்துவத்திற்குள் விழுந்துவிட்ட இலங்கை போன்ற நாட்டினது வர்க்க உறவுகளை விளக்க அப்படியே ஒப்புவிப்பது குழப்பமாகவுள்ளது. இன்றைய நவகாலனித்துவம் மூன்றாமுலக நாடுகளின் தேசியப் பண்புகளை - மொழி, கல்வி, பண்பாடு, தேசநலன், தேசப்பற்று. இன்னபிற - அழித்து, தொங்குசதைப் பண்பாட்டு மனோபாவத்தையும், அதற்குள் நிலவும் தொங்கிப் பிழைக்கும் நிலையையும் சிந்தனாமுறையில் வலுவேற்றிய பின், நவீன விஞ்ஞான முதலாளியம் தரகு முதலாளிய ஏஜெண்டுகளாக மூன்றாமுலகையும், அம்மக்களையும் ஆக்கிய பின் மார்க்ஸைக் கடக்காமல் அவரது கருத்தோடு எல்லையிடுவது சரியாகுமோ?

இலங்கையில் தேசிய முதலாளி வர்க்கம் காலனிய-நவ காலனியத் தன்மையாலும், குறுந் தேசியப் பண்பாலும் நலிந்து இறுதி நிலையடையும் நிலையில் அங்கு குட்டி முதலாளிய வர்க்க இயல்புகள் 1852ஆம் ஆண்டு பிரான்ஸில் நிலவிய நிலைமைகளுடன் இசையமுடியாது.

இலங்கையில் வேண்டுமென்றால் தரகுமுதலாளிய வர்க்கத்தில்

www.tamilarangam.net

தொங்கும் குட்டித் தரகுமுதலாளிய வர்க்கமே - சார்புத் தேசிய முதலாளியமே - நிலைக்கின்றதென்று கூறமுடியும். இருப்பினும் இதுபற்றி நான் முழுமையற்றிருக்கிறேன்.

புலிகளைப் பற்றிப் பிரஜைகள் மிகவும் தவறானவொரு முடிவுக்கு வந்துள்ளார்கள். (1852ஆம் ஆண்டின் கார்ல் மார்க்ஸின் நூலை அப்படியே பொருத்துவதால் வந்த நிலையோ அல்லது "ஒப்பந்த விமர்சகர்களாக" மாறிவிட்டார்களோ?) கலம் 49இில், பக்கம் 52இல் "ஓம். புலிகள் தரகு முதலாளியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறதென்றால் ஒடுக்கப்பட்ட தேசமொன்றின் தரகு முதலாளித்துவம் போகக் கூடிய உச்ச எல்லைக்கு அது போயிருக்க வேண்டும். இந்திய அரசை முற்றாக நம்பி ஆயுதங்களை ஒப்படைத்திருக்க வேண்டும். அல்லது இலங்கையரசின் ஒற்றையாட்சி அதிகாரத்திற்கு உடன்பட்டிருக்க வேண்டும்", "ஆனால் புலியள் அதற்குப் போகமாட்டார்கள் என்று சொல்ல முடியாதே", "உண்மைதாம். அது போகும்போது வரவேண்டிய பிரச்சினை. இப்போதுள்ள பிரச்சினை அவர்களின் போக்கு இதுதான் என்று காட்டுவது"... இப்படி அவர்கள் உரையாடுகிறார்கள்.

இங்கு இந்தியாவை எதிர்த்தது, இந்தியப்படையை எதிர்த்தது, எதிர்ப்பது எல்லாம் தரகு முதலாளியத்திற்கு அப்பாற்பட்டதாம். இதனால் புலிகளை முதலாளிய தேசிய வாதிகளாகப் பிரகடனம் செய்கிறா

*"எங்கடை வெளிநாட்டமைச்சர் அலுக்காமல், குலுக்காமல் நாட்டிலையே இருக்கிறார். அப்ப ஆயுதங்கள் வாங்க ஆர் போகினம்?"*

*"வியாபாரத்திலை போட்டியள் கூடியிருக்கிறதாலை இப்ப ஆயுதங்களை நாட்டுக்குள்ளையே கொண்டு வந்து குடுக்கிறாங்களாம்"*

*- ராசன்*



www.tamilarangam.net

ர்கள்.

தரகு முதலாளியம் இந்தியாவை எதிர்க்க முடியாதா? உலகம் இந்தியாவுடன் முடிவுற்று விடுகிறதா? உலக ஏகாதிபத்தியத்தின் துணையுடன் இலங்கைச் சிங்கள தரகு முதலாளியம் இந்தியாவை எதிர்க்கவில்லையா? Voice of Amerika இலங்கையில், இந்தியாவை எதிர்த்து இலங்கைத் தரகு முதலாளித்துவ அரசால் அனுமதிக்கப்படவில்லையா? சென்ற் அந்தனி, ஞானத் திற்கூடாகவும் பல்முறை இந்தியர் இலங்கைக்கு தூதுகளும், நம்பிக்கையுறுதிகளும் கொடுத்தும் இலங்கை மாறியதா? இவை கேள்விகள்.

ஆனால் புலிகள் ஏன் இந்தியாவை எதிர்த்தார்கள்? புலி மட்டுமா இலங்கையில் ஆயுத இயக்கமாக இருந்தது? புலிகள் ஆயுதங்களைக் கொடுத்துவிட்டு பின்பு கைவசமிருந்த ஆயுதங்களுடன்தானே போராடின? ஈழத் தரகுமுதலாளியம் அல்லது சார்புத் தேசிய முதலாளியம் புலிகளின் ஊடாக முழுமையாகப் பிரதிபலிக்கிறதா?

புலிகளுக்குப் பயம். தம்மிருப்புக்கு சக ஆயுதக் குழுக்களால் ஆபத்து என்பதும், இந்தியா தம்மை மட்டும் தமிழ்த் தரகு முதலாளியத்தின் பிரதிநிதிகளாக ஏற்கப் போவதில்லையென்ற அச்சத்தாலும் ஆயுதங்களைப் பதுக்கி வைத்தார்கள். அவர்கள் நினைத்தபடி இந்தியா சென்றது. மீண்டும் எதிர்த்தார்கள், போராடினார்கள் பிரளைகளால் முதலாளியத் தேசியவாதியானவர்கள்.

பிரளைகள் கலம் 48இல் எழுதிய மாதிரி "புலியின் போக்கு முதலாளியத் தேசியவாதத்தின் இன்றைய போக்குடன் பொருந்துவது" பற்றிய மதிப்பில் தேசிய முதலாளியம் புலிகளையும், அவர்கள் செயலையும் விடச் சிறப்பானது என்ற தெளிவின்மையாலல்ல மேற்காட்டிய புலிகள் பற்றிய எனது கருத்து உருவானது.

அத்துடன் பிரளைகளே குறிப்பிட்டுள்ள சிந்தனையில் ஆதிக்கஞ் செலுத்துகின்ற "தன்னியல்பு" அவர்களுக்கே தொத்திவிட்டதோ என்ற அச்சம் எனக்குண்டு. இல்லையேல் இந்திய இராணுவத்தை, இந்தியாவை எதிர்த்தால் புலிகள் தரகுமுதலாளிய சக்திகளில்லை என்ற முடிவுக்கு வருவார்களா?

தரகு முதலாளியத்தின் பண்பு மிகவும் சிக்கலானது. அது சாராம்சத்தில் தன்னையொரு தேசிய சக்தியாகக் காட்டி நிற்கிறது. எனினும் அது தன்னையே விற்று தன் வயிறு வளர்க்கத் தன் எஜமானர்களின் சிகரெட் ஆஷ்ரேயைத் தூக்கித் திரியும்.

www.tamilarangam.net

இந்நிலையில், இலங்கையில் நிலவும் முதலாளியம் பற்றிய முழுமையான பார்வையாக தரகு முதலாளிய ஆளுமைக்குள் முடங்கிய தேசிய முதலாளியம் தன்னியல்புகளை இழந்து சார்புத் தேசியக் குட்டி முதலாளியமாக முகிழ்க்கிறது. அது தன்னையொரு "டாசா" வாகவோ அல்லது "உபாலி", "நவலோகா"வாகவோ அல்லது சண்முகம், ஞானம் வலகையறாக்களாகவோ காட்டமுடியாது. அப்படிக் காட்ட நவீன விஞ்ஞான உலக ஏகாதிபத்தியமும், அதன் அடிவருடிகளும் இப்போதைக்கு விடப்போவதில்லை.

இறுதியாக, புலிகள் பற்றி புதிய பார்வையைத் தொடங்குவதற்காகவே இவையென்று கூறி புதிய வழிக்காகக் காத்து நிற்கிறோம். அத்துடன் இலங்கையில் நடப்பது தடுப்பு யுத்தமா அல்லது அழிவு யுத்தமாவென்று நாம் பட்டிமன்றம் நடத்தவில்லை. ஏனெனில் இலங்கைச் சிங்கள -சியோனிஸ- பௌத்த மேலாதிக்க-இனவாத அரசின் இனவொடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தை புலி தன் நலனுக்காக கையகப்படுத்திப் போராடுகிறதென்பதில் எமக்குத் தெளிவுண்டு. இன்று கைமாறியுள்ள இனவொடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தை ஈழ-இலங்கை மக்கள் தமது விடுதலைக்கான போராட்டத்துடன் இணைக்க வேண்டியுள்ளது. இது எப்படிச் சாத்தியமாகப் போகிறது என்பதற்கு விடை எளிதானதாகவில்லை. ஈழ-இலங்கை கீழ்தட்டு வர்க்க மக்களின் கைகளிலேயே இது தங்கியுள்ளது.

– ப.வி.ஸ்ரீரங்கன்

ΔΔΔΔΔΔΔΔΔΔΔΔΔΔΔΔΔΔΔΔΔΔΔΔΔΔΔ

# மௌனம் / மரணம்.

* வளவன்

கறணம்
தப்பினால்
மரணம்
ஆ
னா
ல்
மௌனம்
அல்லது
மரணம்
எ
ன்
ப
து
மனச்சாட்சி
உள்ளவர்கள்
விதி
ஆயிற்று...
எ
ம
து
தாயகத்தில்.

www.tamilarangam.net

# ஒரு கோடை அழைப்பு

என் நிலானுக்கு,
உன்னவள் எழுதுவது:
இப்போதெல்லாம்
ஐரோப்பாவில்
இருள நேரமெடுப்பதாக
அறிவித்தாய் !
உனக்குத் தெரியுமோ ?
இங்கே நிரந்தர இருட்டு !
வெடிகுண்டு வெளிச்சத்தில் மட்டும்
புத்தகம் படிக்கிறோம்.
உனது கடிதம் கூட !

புலகவண்டி அடிக்கடி வராது
பிரான்ஸைப் போல.
மரணமும், துப்பாக்கியும்
அடிக்கடி திரியும் தெருக்களில்
மனிதர்களும் போகிறார்கள் !

நீயும் நானும்
கண்களை மூடி
கரங்களைக் கோர்த்து
ஆறுதலாய் அமர்ந்திருந்த
வயல் பச்சையும் வனப்பும்
கண்ணோரத்தில் நிற்பதாய்
எழுதினாய் !
எங்கள் தேசத்தின்
இரத்தச் சிவப்பையும்
நினைவில் வைத்திருப்பாய்
என்றே நம்புகிறேன்.

அந்நிய தேசத்தின்
கட்டிடக் குவியல்
கண்ணைக் குத்துகிறதா உனக்கு ?
இங்கே
இடிந்த சுவரிலும்
இரத்தக் கீறல்கள்.
இடைக்கிடை
அவர்களின்
தியாகம் அறைந்த
சுவரொட்டிகள்.


www.tamilarangam.net

பிறப்பு: 1980.... இதற்கும் மேல்..
நீ இன்னும்
சுகந்தானா ?


அன்பே,
உனது அழைப்புக்கு நன்றி.
இந்தத் தேசத்தின்
இரத்தச் சுவடுகளோடு
இன்னுமொரு அகதியா ?
ஐரோப்பாவிற்கு
அகதிகள் போதும் !
எமது தேசத்தில்தான்
மனிதரும், மனிதமும்
பற்றாக்குறை.
எப்போது நீ வருகிறாய் ?
எனக்கு நம்பிக்கை இருக்கிறது.
நீயும் நானும் நிறைவுகளோடு
வாழ முடியும்
சில கணங்களாவது !
இங்ஙனம்,
உன்னவன் சிந்து.

**

ஷாரங்கிராமன்



www.tamilarangam.net



# கியூபா : இன்னும் எத்தனை காலம் ?

(கலம் 49இன் தொடர்ச்சி)

*சோவியத் நாடும், வார்சோ ஒப் பந்த நாடுகளும், கியூபாவும்.*

---

கியூபாவின் வளர்ச்சியானது, வார்சோ ஒப்பந்த நாடுகளின் தொழிற் பங்கீட்டு முறையினால் வந்த பெறுபேறுகளே. இந் நாடுக ளின் சீர்குலைவுகள் இன்று கியூபா விற்கு புதிய அடிப்படையான, அவ சரமானதும், கடினமானதுமான சீர மைப்பு நிபந்தனைகளை உருவாக்கி யுள்ளன.

1991இல் இருந்து கியூபா ரஷ் யாவிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு முன்னர் வார்சோ நாடுகளுக்குச் செய்துவந்தது போல ரூபிளில் அந்நியச் செலாவணியைச் செலுத்த முடியாது. மாறாக இனி பெறுமதிமிக்க வெளிநாட்டு நாண யமாகச் செலுத்த வேண்டும்.

எழுபதுகளின் ஆரம்பத்தில் இருந்து மேலும் அதிகரித்த ரஷ் யாவுடனான உற்பத்திகளின் மாற் றீடு இதன் மூலம் இரத்தாகிப் போகும்போது இது கியூபாவிற்கு மிகவும் பாரதூரமான ஆபத்தாகும்.

கியூபாவின் வெளிநாட்டு வர்த் தக நிலுவை தொடர்ச்சியாகக் கூடி க்கொண்டு போகிறது. இதனைச் சமன் செய்ய ரஷ்யா கடன் வழங் கியது. இக் கடன் தற்போது மொத்தம் 17.1 மில்லியன் யூ.எஸ் டொலர் ஆகிவிட்டது. கியூபாவின் மொத்த வெளிநாட்டுக் கடன் 31



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மில்லியன் யு.எஸ். டொலராக இருக்கின்றது என்று கருதப்படுகின்றது.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கும் 3ஆம் உலக நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக நிலைமையைப் போலவே, கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும், கியூபாவிற்கிடையான வர்த்தக நிலைமையும் மூலப்பொருள் ஏற்றுமதியாளராகவும் பின்னர் தயாரிக்கப்பட்ட பொருட்கள் இறக்குமதியாளராகவும் இருந்து வந்துள்ளது.

கியூபா மிகவும் குறைந்த அளவிலான பொருட்களையே ஏற்றுமதியாக்கியது.

<u>ஏற்றுமதி:</u>
சீனி - 80%
எலுமிச்சம் பழம் - 2%
நிக்கல் - 5%

<u>இறக்குமதி:</u>
எரிபொருள் / மசகெண்ணை - 47%
இயந்திரங்கள் - 35%

சோவியத்நாட்டில் கியூபா மீதான சலுகையை ஆட்சேபிக்கும் குரல்கள் கிளம்பியுள்ளன. இருந்தும் கியூபாவிற்கு நன்மையளிக்கக் கூடிய விதத்தில் 1990ஆம் ஆண்டில் 14 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் பெற வியாபார ஒப்பந்தங்கள் ரஷ்யாவுடன் ஒப்பந்தமாகியுள்ளது. இது இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான வெளியுறவு வர்த்தகம் மேலும் 8.7 வீதத்தால் அதிகரித்துள்ளமையையே காட்டுகிறது.

கடந்த 5 வருட காலத்தில் இவ்விரு நாடுகளுக்கிடையிலான உற்பத்திகள் பரிமாற்றத்தின் மொத்தப் பெறுமதி 13.2 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். அடுத்த 5 வருடங்களுக்கான ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தின் மூலம் கிடைக்கக்கூடிய அந்நியச் செலாவணியின் மொத்தத் தொகை 23.25 மில்லியன் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கியூபாவின் இன்றைய பிரச்சினையே இவை யாவும் " எதிர்பார்ப்புகள் மட்டும் " என்பதே.

உதாரணமாக 1990இன் முதல் அரையாண்டுக்காலப் பகுதியில், கிழக்கு ஜேர்மனிக்கான சீனி ஏற்றுமதியானது ஒப்பந்தமாகிய தொகையின் 10% மட்டுமே என்பதையும் - அதேவேளை இவ்வொப்பந்தம் வெளிநாட்டு வர்த்தகத்தின் 5% என்பதும் கவனிக்கப்படவேண்டியவை.

கியூபாவின் வியாபார ஒப்பந்தக்காரர்களான கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் வெளிநாட்டு வர்த்தகத் திணைக்களங்கள் அல்லது அமைப்புகள் கலைக்கப்பட்டோ, காணாமலோ போய்விட்டன. இதனால் கியூபாவின் பழக்கமான,

www.tamilarangam.net

வழக்கமான நுகர்வோர் மறைந்து விட்டனர். மேலும் இந்தப் பழக்க மான, வழக்கமான நுகர்வோர் சந்தையில் இருந்து கியூபாவின் உற்பத்திப் பொருட்களும் அப்புறப் படுத்தப்பட்டு வருவதும் தெரிகிறது.

1990இல் ரஷ்யாவுடன் நடந்த வர்த்தக வருமானத்திற்கும் "எதிர் பார்த்த" வர்த்தக வருமானத்திற்கு மான வித்தியாசம் எவ்வளவு என் பதை அறியமுடியவில்லை. ஆனா லும் எரிபொருள் வழங்கலில் ஏற் பட்ட குறைப்பு கியூபாவின் பொரு ளாதார வீழ்ச்சியில் மேலும் வீழ்ச் சியை ஏற்படுத்தியுள்ளதைத் தவிர்க்க முடியாதிருப்பது உண்மையே.

### *அசாத்தியமானதைச் சாத்தியமாக்கலாமா?*

ரஷ்யாவின் பொருளாதாரத் தேய்வு, போலந்தினதும் ஹங்கேரியினதும் துரிதகதிப் பஞ்ச நிலைக ளில் இருந்து பிடல் கஸ்ரோவின் வாதமானது நியாயமானதாகவே இருக்கிறது.

"முன்னைய வார்சோ ஒப்பந்த நாடுகளின் தற்போதைய பிரச்சி னைகளைத் தீர்த்துவைக்க முதலா ளித்துவ பொருளாதார அமைப்பு தீர்வாக அமையப் போவதில்லை. அது ஆர்ஜன்ரீனா, பிறேசில் போன்ற நாடுகளை அழிவுக்குக் கொண்டு வந்தது. மேலும் லத்தீன் அமெரிக்காவின் சிறிய நாடுகளை பூரண அடிமையாக்கியது. முதலாளித் துவம் இன்னும் என்ன செய்யலாம்? பாரிய மக்கள் கூட்டத்தின் பெரும் பான்மையினரை ஏழைகளாக்கி



www.tamilarangam.net

சமூகப் பிரச்சினைகளை இன்னும் கூர்மைப்படுத்தும். ஒரு சிறிய மேல்தட்டு வர்க்கத்தை உருவாக்கி நாட்டுக்கு வெளியே அவர்களது இலாபத்தை கொண்டு வருவதற்கு உதவும்"

பெரு நாட்டில் அலன் கார்சியாவின் (Alan Garcias) சமூக சனநாயகப் பாதையில் ஏற்பட்ட முறிவுகள், லத்தீன் அமெரிக்காவில் இந்த சமூக சனநாயகப் பாதைக்கு அநேக ஆதரவோ சாத்தியங்களோ இல்லை என்பதையே காட்டி நிற்கின்றது. அப்படியானால் பிடலின் மாற்று வழிதான் யாது?

ரஷ்யாவின் ரூபிள் கிடைக்கப் போவதில்லை. எனவே மக்களின் அரசியல் நடத்தைகளைக் கொண்டே இதற்கான வழி ஒன்று இருக்கின்றதா என்பதை நிர்ணயிக்கமுடியும். இப் பிரச்சினைக்கான தீர்வு காண இன்றைய தேவையான மக்களை அணிதிரட்டுவதென்பது "மேலிருந்து முடுக்கிவிடப்படுபவர்களால்" முடியாது. அது அரசியல் ரீதியில் சரியானதாகவும் தெரியவில்லை.

உற்பத்தியின் வளர்ச்சியானது உற்பத்தியாளர்களுடனான உண்மையான கலந்தாலோசிப்பின்றி நடைபெற முடியாது. ஒரு திறந்த பரவலான விவாதமின்றியோ, வெகுசன, சமூக தொடர்புச் சாதனங்களின் சனனாயகப்படுத்தலின்றியோ உண்மையில் அரசியல் சார்ந்திருக்காத தொழிற்சங்க, வெகுசன அமைப்புகள் இன்றியோ பிடல் கஸ்ரோவினால் ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியை, அதற்கான உறுதியான அடிப்படையை ஸ்தாபிக்கமுடியாது.

ஆனால் இங்கே முன்மொழியப்பட்ட இந்தப் போக்கில் சென்ற அல்பானியத் தலைமை இன்று நிலைகுலைந்து நிற்கின்றது. இன்று அல்பானியாவில் நடைபெறுவது நாளை கியூபாவிலும் நடைபெறலாம். சோசலிஸத்தில் மேலும் புதியவற்றைக் காணவிழைந்த சக்திகள் சோசலிஸத்தையே விரும்பாத சக்திகளால் தன்னிவிழுத்தி நசிபட்டுப் போய்விட்டதை - அந்த ஆபத்தை - நாம் இன்று கிழக்கு ஜேர்மனியில் பார்க்கின்றோம். இந்த இக்கட்டான நிலையில், வெகுசனத் திரளில் யதார்த்தப் பங்களிப்பின் மூலமே தீர்க்கப்படக்கூடிய பொருளாதாரப் பிரச்சினைகளை கியூபா எதிர்நோக்கியுள்ள நிலையில், இப் பிரச்சினையில் மூழ்குவதைக் காட்டிலும் கியூபாவில் தொடர்ந்தும் சோசலிசம் நிலவுவதே சாத்தியமாகும்.

எனினும் இன்றுள்ள தலைமையைக் காப்பாற்ற தேசிய ஒற்றுமையைப் பேணுவதும், அதற்காக அடக்குமுறை இயந்திரங்கள் பாவிக்கப்படுவதும் நடைபெறலாம். அதுவே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிச்சயமாக கியூபாவின் சோசலிச அழிவுக்கு வழிவகுக்கும் ! 32 வருடங்களாக அமெரிக்காவின் ஆசையும் இதுவாகும்.

(இக் கலத்தில் முடிவுறும் இத் தொடர்கட்டுரை ஜேர்மனிய கொம்யூனிஸ இணைப்புக்குழுவினால் வெளியிடப்படும் "ak" தொழிலாளர் போராட்டம் என்ற பத்திரிகையிலிருந்து சுருக்கமாக்கி, தமிழாக்கப் பட்டுள்ளது. இக் கட்டுரை பற்றிய கேள்விகள் இருப்பின் அவற்றுக்குப் பதிலளிக்க ஜே.கொ.இ.குழு விரும்புகிறது. இருப்பின் அனுப்பிவையுங்கள். )

தமிழில்: பெனடிக்ற்

---

ஏப்ரல் மாத

## இரவல் தூண்டில்

"உயிர்ப்பு" சஞ்சிகையில் வெளியான "தேசிய சக்தி பற்றிய சில பிரச்சினைகள்" என்ற கட்டுரை மறுபிரசுரமாகிறது.

## " வறிய நாடுகள் "



(தொடர்ச்சி 54ஆம் பக்கம்)

www.tamilarangam.net






மதிய போசன இடைவேளையின்போதுதான் உதயனுடன் லம்பெர்த்ஹைறம் தீவைப்புப் பற்றி கதைக்க முத்துவுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. சாப்பாட்டு அறையில் மேசையின் எதிரும், புதிருமாக அமர்ந்திருந்தார்கள். அங்காலும், இங்காலுமாக கிறீக், போலந்த், டொச் சக தொழிலாளர்களும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். கோப்பி மணமும், சலாமி, ஷிங்கன் மணமும் கலந்து மணத்தன.

"நாஸியள்தான் எரிச்சிருப்பாங்களோ?" முத்து கேட்டான்.

"வேறை ஆர் செய்திருப்பாங்கள்? பொலிஸ் வந்து எரியிறதைப் பாத்துக்கொண்டு நிண்டதாம்"

"அரசாங்கத்துக்கு கெட்ட பேரேல்லே வரும்"

"உண்மையான நியூஸ் வெளியிலை வந்தாவெல்லோ? அதுதான் நடக்கிறதெல்லாம் விபத்துத்தானெண்டு பேப்பரிலை நியூலாய் வருகுது"

"போற போக்கிலை என்ன நடக்கும்?"

"கொலையள் நடக்கும்"

"பாவம் அந்தப் பமிலி. நாட்டிலை இருந்தால் உயிர் போயிடும் என்டு இஞ்ச வந்தா இப்பிடிக் கருக்கிப் போட்டாங்களே. பதின்மூண்டு வயசுப் பிஞ்சுக் குழந்தையும் எரிஞ்சு கருகிப் போய்க் கிடந்துதாம்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முத்து மண்ணிறப்பாண் சாப்பிட்டு முடித்துக் கோப்பி குடித்தான். சிலோன் கோப்பி மணம் சட்டென்று பரவியது. இடைவேளை முடிய இன்னும் எட்டு நிமிடங்கள். சிலர் புகைத்தார்கள்.

"எனக்கெண்டால் இங்கத்தையில் வாழ்க்கை வெறுத்துப் போச்சு. முந்தி மாதிரி இல்லை இப்ப நிலைமை. வரவர மோசம். பஸ்ஸிலை, றெயினிலை போகேக்கையெல்லாம் எரிக்கிற மாதிரிப் பாக்கிறாங்கள். ஏசுறாங்கள். சின்னப்பிள்ளையள் கூடி நேகர் எண்டு ஏசுதுகள். சீ எண்டு போச்சு"

"எல்லாருக்கும் இது பிரச்சிலனதானே?"

"எங்கை எல்லாருக்கும்! இப்பிடிப் பிரச்சினையள் இருக்கெண்டே கனசனத்துக்குத் தெரியாது. சொன்னாச் சிரிக்கிறாங்கள். எருமை மாட்டிலை மழை பெய்யுற மாதிரித் தான்"

"அப்ப என்ன செய்ய உத்தேசம்?"

"நாட்டுக்குத் திரும்பிப் போகலாமோவெண்டு யோசிக்கிறன்"

"என்ரை றூம் மேற் எண்பத்திநாலாம் ஆண்டிலயிருந்து இந்தா போறன் எண்டு சொல்லிக் கொண்டிருக்கிறான்"

முத்து இதற்கு எதுவும் சொல்லவில்லை. அவனுக்குக் குழப்பமாக இருந்தது. எல்லாம் வெறுத்திருந்தது.

இடைவேளை முடிந்து மறுபடி வேலை ஆரம்பித்துவிட்டது. இயந்திரங்களின் சத்தத்துடன், பொதிகளைத் தள்ளும், வண்டில்கள் ஓடும் சத்தங்களும் சேர்ந்துகொண்டன. முழு அசுத்தமான வளி. இரசாயனம் கலந்திருந்தது. சுவாசிக்க அனைத்து வேலையாட்களும் நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தார்கள்.

"மூண்டாவது மெசினிலை நிக்கிற போலந்துக்காறனை ரண்டு நாளாய்க் காணேலை. கிறங்கோ?" இயந்திர இரைச்சலை மீறிக்கொண்டு முத்து கேட்டான்.

"உனக்குத் தெரியாதே. அவனுக்குக் குண்டிக்கன் குடுத்தாச்சு"

"ஏன்? ஒழுங்காய்த்தானே வேலை செய்தவன்"

"வேலையாலை நிப்பாட்ட வேணுமெண்டால் உதொரு காரணமே. முதலாளி இந்தப் பக்றியின்ரை அரைவாசியை போலந்துக்குக் கொண்டு போட்டான். அங்கை கூலி மலிவாம். டொச்மாக்கை விட போலந்துக் காசு பெறுமதியும் குறைவுதானே. அந்தக் காசிலை சம்பளம் குடுத்தா, இங்க குடுக்கிற

www.tamilarangam.net

சம்பளத்தின்ரை அரைவாசிதான் முதலாளிக்கு முடியும். அதாலை சும்மா ஒரு சாட்டை வைச்சு இஞ்ச ஆக்களைக் குறைச்சுக்கொண்டு வாறான். போலந்துக்காறனுக்கு வேலையாலை நிப்பாட்டேக்கை முனா சொன்னானாம் நீ போய் போலந்திலை இருக்கிற பக்றியிலை வேலை செய்யெண்டு"

"அநியாயமடாப்பா. அவன் பிள்ளை குட்டிக்காறனெல்லே"

"முனாமார் எப்ப நியாயமாய் இருந்தவங்கள்?"

"ரண்டு வருசமாய் பக்றிக்கை நிண்டு அவனும் இந்த ஊத்தைக் காத்தைக் குடிச்சவன்தானே. முக்காலை சனி கறுப்பாய் வருகுதெண்டு சொன்னான். முனா வெல்ஸமோன் உப்பிடிச் செய்துபோட்டான்"

உதயன் ஒருகணம் தனக்கான மெஷினை மறந்து, முத்துவைப் பார்த்தான். முத்துவின் கோபம் உண்மையானதா அல்லது சும்மா பொழுதுபோக்குக்கா என்று கணிப்பதைப் போலிருந்தது அவன் பார்வை.

"என்ன அப்பிடிப் பாக்கிறாய்?"

"ஒண்டுமில்லை"

மறுபடி வேலையில் மூழ்கினார்கள். இயந்திரங்கள் மூலங்களைச் சாப்பிட்டு, உற்பத்திகளை அளவு கணக்கில்லாமல் துப்பிக் கொண்டிருந்தன. அவற்றுடன் மனிதர்கள் வியர்க்க, வியர்க்கப் போட்டியிட்டுக் கொண்டிருந்தார்கள். இயந்திரங்களை அவர்கள் கவனிக்கிறார்களா, இயந்திரங்கள் அவர்களைக் கவனிக்கின்றனவா என்பது மாயமாக இருந்தது. இரத்தத்தையும், மின்சாரத்தையும் உறிஞ்சியபடி நேரம் போய்க் கொண்டிருந்தது.

வேலை முடிந்தபோதுதான் எல்லோரும் பெருமூச்சு விட்டார்கள். அடுத்தநாள் வேலைக்காகத் தங்கள் மிகுதி நாளில் தயாராக அவரவர் வழிகளில் போனார்கள்.

"எவ்வளவு பிரச்சினையள் பாத்தியே?" நடந்துபோகும்போது உதயன் கேட்டான். மார்ச் மாதத்திற்குரிய மழைத்துளிகள் விழுந்து கொண்டிருந்தன. காற்றில் ஏழு பாகை குளிர் இருந்தது.

"எல்லா இடமும் பிரச்சினைதானெண்டால் என்ன நிலையடாப்பா? உலகம் அழிஞ்சால்தான் ஒரு முடிவு கிடைக்கும் போலயிருக்கு"

"எப்ப யெகோவாவிலை சேர்ந்தனி?"

"என்ன உப்பிடிக் கேக்கிறாய்?"

www.tamilarangam.net

"இல்லை. உலகம் அழிஞ்சால் தான் முடிவு கிடைக்குமெண்டுறாய். அதுதான். ரண்டாயிரம் வருசத்திலை உலகம் அழியப் போகுதெண்டு அவங்கள்தான் சொல்லிக்கொண்டு திரியிறாங்கள்" உதயன் சிரித்தான்.

மழை பெரிதாகக் கூடிய சாத்தியங்கள் தென்பட்டன. பஸ் தரிப்புக்கு இன்னும் நடக்க வேண்டும். வேலையில் சத்திழந்ததால் சோர்வாயிருந்தார்கள்.

"நாங்களென்னடாப்பா செய்யலாம்? எவ்வளவு சின்ன ஆக்கள் நாங்கள்" என்றான் முத்து.

"சின்னனெண்டால் ஒரடி அஞ்சங்குலம்...? நாங்கள் சின்னனெண்டு நீ எப்பிடி அளவெடுக்கிறாய்?"

"கொஞ்சப் பேர்தானே பாதிக்கப்படுறம். உலையுறம். கஷ்ரப்படுறம்"

"எண்டு நீ நினைக்கிறாய். பாதிக்கப்படுற ஆக்கள்தான் உலக சனத்தொகையிலை கூட. தாங்கள் பாதிக்கப்படுறோம் எண்டதைத் தெரிஞ்சுகொண்ட ஆக்கள் குறைவெண்டு சொல்"

"எல்லாரும் தெரிஞ்சு கொள்ளுறதெப்ப?"

"நல்ல கேள்வி. மறுமொழியை நீயே தேடு"

பஸ் பிடித்து, ட்ரெயின் எடுத்து, முத்து அறைக்கு வந்தபோது ஞானம் சமைத்து வைத்திருந்தான். இருவரும் சேர்ந்து சாப்பிட்டார்கள்.

"பாலகுமார் எங்கை?"

"அவசர அலுவலெண்டு போனான். இன்னும் காணேலை" ஞானம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே "சைஸ, ஒண்டுமே சரிவருகுதில்லை" என்றபடி பாலகுமார் தோன்றினான்.

"என்னடாப்பா எங்கை போட்டு வாறாய்?"

"நிக்ஸ் ஷிலிமாம். அவனுக்கென்ன சொல்லிப் போட்டான். நிக்ஸ் ஷிலிமோ இல்லையோவெண்டு எனக்கெல்லோ தெரியும்"

"உவன் எப்பவும் உப்பிடித்தான். ஒழுங்காய் ஒண்டும் சொல்லான். இடையிலயிருந்துதான் தொடங்குவன். எங்கை போட்டு வாறாய், என்ன நடந்து எண்டு கொஞ்சம் விளக்கமாய் சொல்லன்"

*( இன்னும் வரும் )*


*

பார்த்திபன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




01.02.1992 (வீ) ####
மட்டக்களப்பு வாவியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த 2 தமிழர்கள் ஊர்க்காவற்படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் 256 அகதி முகாம்கள் இயங்கி வருகின்றன. இம் முகாம்களில் 11,118 குடும்பங்களைச் சேர்ந்த 49,408 பேர் இடம் பெயர்ந்து தங்கியுள்ளனர்.

1983 முதல் 12 ஆயிரம் பேர் இலங்கையில் காணாமற் போயிருக்கிறார்கள். இராணுவம், பொலிஸ் மற்றும் கொலைக் குழுக்கள் பெரும் எண்ணிக்கையில் பொதுமக்களைக் கொலை செய்ததன் விளைவாகவே இந்நிலை ஏற்பட்டது. ஐ.நா. செயற்பணிக்குழு ஆய்வுக்குட்படுத்திய 40 நாடுகளிலே இலங்கையில்தான் அதிக எண்ணிக்கையானோர் காணாமற் போயுள்ளனர்.

05.02.1992 (வீ) ####
ராஜீவ் கொலை தொடர்பாக பிரபாகரனையும், பொட்டு அம்மானையும் சரணடையுமாறு சென்னை விசேட நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

06.02.1992 (வீ) ####
எம்பிலிப்பிட்டியாவில் 2 ஆண்டுகளுக்கு முன்னர் 31 பாடசாலை மாணவர்கள் கடத்திச் செல்லப்பட்டது குறித்து விசாரணை செய்ய சுதந்திரமான ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இரணவிலவில் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா அஞ்சல் நிலையம், உல்லாசப் பயணக் ஹோட்டல் அமைக்கும் உத்தேசத் திட்டத்தை எதிர்த்து முதற்கட்டமாக அப் பகுதி மக்கள் தென்னை மரங்களில் வெள்ளைநிற சிலுவைகளை அறைந்து வருகிறார்கள். அரசு தனது திட்டத்தை நடைமுறைப்படுத்த முயலுமானால்

www.tamilarangam.net

கிராம மக்கள் தம்மையே சிலுவை மரத்தில் வைத்து அறைய ஆயத்தமாக இருக்கிறார்கள் என உள்ளூர்வாசியொருவர் தெரிவித்துள்ளார்.

07.02.1992 (வீ) ####

வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாக மலையகப் பெண்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் கோஷ்டிகள் கொழும்பைத் தலைமையாகக் கொண்டு இயங்கி வருகின்றன. இக் கோஷ்டிகளிடம் பணத்தைக் கொடுத்து ஏமாந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட பல பெண்கள் தொழில் பெறச் சென்ற நாட்டுக்குள் புகமுடியாமலும், திரும்பி வர முடியாமலும் நட்டாற்றில் விடப்பட்டுள்ளனர்.

08.02.1992 (வீ) ####

தமிழ்நாட்டிலிருந்து அண்மையில் இலங்கை திரும்பிய வட-கிழக்கு அகதிகள் தங்குவதற்கு இடமின்றி கோவில்களிலும், பொது இடங்களிலும் தங்குகின்றனர். மதிய வேளைகளில் கோவில்களுக்குப் போய் அன்னதானத்தை உண்டே தங்கள் பசியைத் தீர்த்துக்கொள்கிறார்கள்.

மண்டைதீவு, மண்கும்பான் ஆகிய பகுதிகளிலிருந்து பல இளைஞர்கள் காணாமற் போயுள்ளனர். இவர்களில் பலர் 17 வயதிற்குட்பட்ட க.பொ.த. சாதாரண தர மாணவர்கள். இது தொடர்பாகப் பெற்றோர் அதிகாரிகளிடம் முறையிட்டபோது அவ்விளைஞர்கள் விசாரணைக்காகக் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டதாக கூறப்பட்டது. ஆனால் 2 வாரங்களுக்கு முன்னர் இப் பகுதியில் குழியொன்றிலிருந்து 72 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சடலங்களின் கைகளும், கால்களும் கட்டப்பட்டிருந்தன. தலைகளில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்தன.

09.02.1992 (வீ) ####

உலக வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்ட மகாநாட்டில் இலங்கைக்கு 82 கோடியே 50 இலட்சம் டொலர்களை வழங்க மேற்குநாடுகள் உறுதியளித்துள்ளன. சர்வதேச நாணய சபையிடமிருந்து ஏப்ரலில் இரண்டாவது தவணையாக 46 கோடி டொலர் கடனையும் இலங்கை பெறவுள்ளது.

09.02.1992 (வீ) ####

உலகில் அதிகமாக மனிதர்கள் கடத்தப்படுவதும், காணாமற் போவதும், கொலை செய்யப்படுவதும் இலங்கையிலாகும். புத்த சமயமும், தர்மமும் அரசோச்சுகிறது எனக் கூறும் இந் நாட்டில் இன்று மாதமொன்றுக்கு 1,000இற்கும் அதிகமான

www.tamilarangam.net

மனித உயிர்கள் அநியாயமா
கப் பறிக்கப்படுகின்றன - லலித்

11.02.1992 (வீ) ####
இலக்கத்தகடுகள் இல்லாத
வான்களில் வரும் நபர்களி
னால் நூரானைப் பகுதியில்
பல தமிழர்கள் கடத்தப்படு
கின்றனர்.

மனித உரிமைகளுக்கான பல்
கலைக்கழக ஆசிரியர்கள்
என்ற பெயரில் வெளியிடப்பட்
டுள்ள பிரசுரத்திற்கும் யாழ்
பல்கலைக்கழகத்திற்கோ,
இப் பல்கலைக்கழகத்தின்
எந்த ஒரு ஆசியருக்கோ
எந்த ஒரு தொடர்பும் இல்
லையென்று யாழ்பல்கலைக்
கழக கவுன்ஸில் தெரிவித்
துள்ளது.

வடக்கு-கிழக்குப் பகுதியில்
வருவாயைப் பெறவும், அப்
பகுதிகளில் தமிழ்ப் பொலிஸ்
படையையும், தமிழ் இராணு
வப்படையையும் நிறுவி ஈழ
ராஜ்ஜியத்தை உண்டுபண்ணு
துமே தொண்டமானின் நடவ
டிக்கையாக இருந்து வருகி
றது. ஈழராஜ்ஜியம் ஒன்று
தோற்றுவிக்கப்பட்டால் நிச்ச
யம் சிங்கள இனம் அழிந்து
விடும். 1948ஆம் ஆண்டு சுத
ந்திரமடைந்தபோது முழு
நாட்டிலும் மூலை முடுக்குகளி
லெல்லாம் சிங்கக் கொடிகள்
பறந்தன. நாடு பொருளாதார
சுதந்திரத்தை அடையமுடி
யாது போனாலும் அரசியல்
சுதந்திரத்தைப் பெற்றது.
ஆனால் இன்று வடக்கு,கிழ
க்குப் பகுதிகளுக்கு சிங்கள
மக்கள் போகமுடியாத நிலை
ஏற்பட்டிருக்கிறது. இதனால்
இன்று எமது சுதந்திரம் பறி
போய்க் கொண்டிருக்கிறது
- திகொல ஊராபொள பிரி
வேணாதிபதி

வடக்கும், கிழக்குப் பிரதே
சம் மாத்திரமல்ல மிக விரை
வில் அம்பாந்தோட்டைப் பகு
தியும் ஈழ ராஜ்ஜியமாக
மாறுவதற்கு வாய்ப்பு ஏற்ப
ட்டு வருகிறது - ருகுணு பல்
கலைக்கழக விரிவுரையாளர்

12.02.1992 (வீ) ####
1990ஆம் ஆண்டு யூன் மாத
த்திலிருந்து புலிகள் இயக்கம்
அதன் விடுதலைப் போராட்ட
த்திற்கு எந்தவொரு வெளி
நாட்டிலோ. அந்நிய அமைப்
பிலோ தங்கியிராது செயற்
படுவதெனத் தீர்மானித்துவிட்
டது - மாத்தயா

சிங்களவர்கள் பரம்பரையாக
வாழ்ந்த காணிகள் ஆங்கிலே
யர்கள் இந்த நாட்டை ஆண்ட
காலத்தில் சுவீகரிக்கப்பட்டு
அவை கோப்பி, தேயிலை,
றப்பர் தோட்டங்களாக மாற்
றியமைக்கப்பட்டது மட்டும
ன்றி அக் காணிகளில் வாழ
இந்தியாவிலிருந்து தமிழர்க
ளையும் கொண்டுவந்து குடி

www.tamilarangam.net

யேற்றிவிட்டனர். இன்று ஆங்கிலேயர்கள் இந்த நாட்டைவிட்டு போய் விட்டாலும் காணிகளைப் பறிகொடுத்த சிங்களவர்கள் பரம்பரை அதனை மீண்டும் அனுபவிக்க முடியாத சூழ்நிலையில் இருந்து வருகின்றனர் - ம.மா.ச. சபாநாயகர்

13.02.1992 (வீ) ####
அரச வங்கிகளைத் தனியார் மயப்படுத்துவதற்கு உலக வங்கி திரைமறைவிலிருந்து செயற்பட்டு வருவதாக இலங்கை வங்கி ஊழியர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமையைப் பாதுகாப்பது சம்பந்தமாக மாத்தறையில் பிரஜைகள் முன்னணி வைத்திருந்த படங்களையும், சுவரொட்டிகளையும் நாசமாக்கிக் கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் பாஸிஸ்ட் முறையை நிருபித்துள்ளது. இந்த நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டம், வாழ்க்கைச் செலவின் உயர்வு, கல்வித்துறை அழிக்கப்படுதல், தேசிய கலாச்சாரம் நாசமாக்கப்படுதல் போன்றன மிகவேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றை நீக்குவது இன்றைய அரசினால் முடியாது. இந்த அரசு எப்போதுமே உலக வங்கியினதும், பல்வேறு இனக் கம்பெனிகளினதும் விருப்புகளைப் பூர்த்தி செய்வதிலேயே காலத்தைக் கடத்தி வருகின்றது - மனித உரிமை முன்னணியின் அமைப்பாளர்.

திருமலை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இரவோடிரவாகச் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறுகின்றன. லவ்லேன் பகுதியில் இருந்த 40 முஸ்லீம் குடும்பங்களும் இடம்பெயர்ந்து சென்றுவிட அந்த இடங்களில் இப்போது சிங்கள மக்கள் குடியேறியுள்ளனர்.

14.02.1992 (வீ) ####
புதிதாக தேயிலைச் செடிகளைப் பயிரிடுவது என்ற போர்வையில் ஏற்கெனவே உள்ள தேயிலைத் தோட்டங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இது உலக வங்கியின் கட்டளையின் பேரில் நடைபெறுகிறது.

மோதரையில் நடந்த கொலை தொடர்பாக வத்தளையைச் சேர்ந்த இளைஞர் என்பவர் கடந்த மாதம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டுள்ளார். கண்களும், கால்களும் கட்டப்பட்ட நிலையில் கணவர் கைதாவதைப் பார்த்த 3 மாதக் கர்ப்பிணியான மனைவி மயங்கி விழுந்ததால் கருச்சிதைவு ஏற்பட்டுள்ளது. கைதானமகனைப் பார்க்கப் பொலிஸ்

நிலையம் சென்ற தாய் அவதூறு பேசி விரட்டப்பட்டுள்ளார்.

15.02.1992 (வீ) ####
வவுனியாவில் தோணிக்கல், தேக்கங்காடு ஆகிய 2 பிரதேசங்களில் 90சதவீதம் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்தனர். ஆனால் அக் குடும்பங்கள் இப்போது இந்தியாவில் அகதிகளாக உள்ளனர். இவ்வேளையில் மீளக் குடியமர்வு என்ற போர்வையில் சிங்கள மக்களை மேற்படி இடங்களில் குடியமர்த்துவதற்கு இரவோடிரவாகத் துரித ஏற்பாடுகள் நடந்துவருகின்றன.

17.02.1992 (வீ) ####
இலங்கை–இந்திய சமாதான உடன்படிக்கையின் ஏற்பாடுகள்தான் முதற்தடவையாக இலங்கைச் சமூகத்தின் பலமொழி, பலமத, பல்லின அம்சத்தைச் சட்டரீதியாக ஏற்றுக் கொண்டிருக்கின்றன. இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் இதற்கு மேல் ஒன்றும் கேட்கக் கூடாது – காமினி

18.02.1992 (வீ) ####
1971ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் வேலைநீக்கம் சம்பந்தமாக விசேட சட்டக் கோவை இலக்கம் 45 மூலம், தோட்டங்களில் ஆட்குறைப்புக் காரணமாகவோ, வேலைகள் போதாதென்ற காரணமாகவோ அல்லது வேறு காரணங்களினாலோ தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுமானால் அது தொடர்பாக தோட்ட நிர்வாகம் தொழில் ஆணையாளரின் அனுமதியைப் பெற்றேயாக வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தது. இந்த விசேட சட்டத்தை ரத்துச் செய்யும்படி உலக வங்கியும். இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

20.02.1992 (வீ) ####
தோட்டங்களின் நிர்வாகம் வெளிநாட்டவரிடம் ஒப்படைக்கப்பட்டால் தேசிய நலன் பாதிக்கப்படும். தென்னிந்தியர்கள் நிர்வாகத்தை ஏற்றால் சிங்களவர் பாதிக்கப்படுவர் – சு.க

21.02.1992 (வீ) ####
போருக்குப் பயந்து உயிர்ப் பலியை விரும்பாமல் இராணுவத்திலிருந்து 3 ஆயிரம் பேர் தலைமாறைவாகியுள்ளனர். இவர்களைத் தேடிப்பிடித்து மீண்டும் இராணுவத்தில் சேர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கேகாலை மாவட்டத்தில் பல தொழிலாளர் குடியிருப்புகள் இடிந்து விழும் நிலையிலுள்ளன. இதனால் அவற்றில் வாழும் தொழிலாளர் குடும்ப



www.tamilarangam.net

www.tamilarangam.net

ங்கள் பெரும் பீதியுடன் வாழ்கின்றனர். தொழிற்சங்கங்கள் கடிதத் தொடர்போடும், பேச்சுவார்த்தை என்ற போர்வையோடும் தம் கடமைகளை முடித்துக் கொள்கின்றன.

அப்புத்தளை முத்துவனை தோட்ட தமிழ்ப் பாடசாலை கட்டிட வசதியின்றி கறாஜ் ஒன்றிலேயே இயங்கி வருகின்றது. இச் சிறிய காறாஜிலே எந்தத் தளபாட வசதிகளும் இல்லை.

மட்டக்களப்பில் கடந்த 1 மாதத்தில் நெல் வயலுக்குக் காவலிருக்கச் சென்ற 26 பேர் கடத்தப்பட்டுள்ளனர். இவர்களில் 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களும் அடங்குவர். அத்துடன் அகதி முகாம்களிலிருந்தவர்களும் கடத்தப்பட்டுள்ளனர்.

22.02.1992 (வீ) ####

புத்தளத்தில் 10 முஸ்லீம் இளைஞர்கள் இனந் தெரியாத கோஷ்டியினால் கடத்தப்பட்டுள்ளனர்.

24.02.1992 (வீ) ####

1964ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கைக் குழந்தைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றனர். இந்த நிலையைப் பயன்படுத்திக்கொண்டு பல குழந்தைப் பண்ணைகள் தென்னிலங்கையில் இயங்கி வருகின்றன. இவ் வியாபாரத்தில் முன்னணி சட்டத்தரணிகளும், முக்கிய பிரமுகர்களும் சம்பந்தப் பட்டிருக்கின்றனர். இவ் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் வருடாந்தம் 9 கோடி ரூபாவை வருமானமாகப் பெறுகிறார்கள். எனினும் குழந்தையைப் பெற்றுக் கொடுக்கும் தாய்க்கு ஆயிரம் ரூபா மட்டுமே கிடைக்கிறது.

அம்பாறையில் ஒரு பெண்ணும், 2 குழந்தைகளும் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

25.02.1992 (வீ) ####

யாழ்நகர் மீது தாக்குதல் நடத்துவதை இராணுவத்தினரில் ஒரு பிரிவினர் விரும்புகின்ற அதேவேளை இன்னொரு பிரிவினர் விரும்பவில்லையென பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன. படைவீரர்கள் மற்றும் குடிமக்கள் உட்பட பெருமளவினர் சாகப் போகிறார்கள். நாம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினால் கூட புலிகள் காடுகளுக்குள் சென்று அங்கிருந்து கெரில்லாப் போரைத் தொடருவர் என யாழ்நகர் மீதான தாக்குதலை எதிர்க்கும் பிரிவினர் கூறியுள்ளனர்.

www.tamilarangam.net

# ஒரு பரதேசியின் பார்வையில்
## தேசத்தின் குறிப்புகள்

( கலம் 49 இன் தொடர்ச்சி )

*நிர்ம:* மற்ற இயக்கங்களை அழிச்சிருக்காட்டி அவையள் தமிழீழத்தைப் பிடிச்சுப்போட்டுத்தான் அடுத்த வேலை பாத்திருப்பினம்.

*மார்:* அனைத்து இயக்கங்களுமே ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்குமேல் போராட்டத்தை நகர்த்த முடியாது என்பதை இயக்கங்கள் சார்ந்திருந்த அந்நியசக்திகள், வர்க்க நிலைப்பாடு, போராட்ட அணுகுமுறைகள் என்பன தெளிவுபடுத்தின. ஆனால் இங்கு பிரச்சினை தமிழீழத்தைப் பிடிச்சிருப்பினமா இல்லையா என்டதில்லை. புலிக்கு ஏனைய இயக்கங்களை அழிக்க எந்த அதிகாரமும் இல்லை. பிணந்தின்னி அரசுகளையும், அதன் உளவுப்படைகளையும் தவிர யாருமே புலிக்கு அதிகாரம் கொடுக்கவில்லை. அடிப்படை உரிமைகளையே மறுதலிக்கின்ற பாஸிஸ்டுகளாக சீரழிந்துள்ள புலிகள் திருந்த வாய்ப்பிருப்பதாகவும், புலிகள் ஐக்கிய முன்னணி கட்டிப் போராடினாலொழிய கஷ்ரம் எனவும் 'புதிய போதனை'யைப் பிரஜைகள் போதிக்கிறார்கள். ஆனா கடந்த காலத்திலை எங்கடை இயக்கங்கள் கட்டின ஐக்கிய முன்னணி என்ன பாடுபட்டது என்டதும், புலியின்ரை தொடர்ந்து கொண்டிருக்கிற தேடியழிக்கும் நடவடிக்கையும், புலியுடனான ஐக்கிய முன்னணி என்ற கேள்விக்கு முற்றுப்புள்ளி வைச்சிருக்குது. சில வேளை ஞானஸ்தானமோ, தீட்சையோ கேட்டால் பிரஜைகள் கருதுறதுபோல புலிகள் திருந்தலாம்.

www.tamilarangam.net

*நிர்ம:* உங்களுக்கென்ன இங்கிருந்து கத்துறியள். அங்க அவங்கள் போராடுறாங்கள். சனத்துக்குப் புலியள் இண்டைக்குத் தேவையாயிருக்கு.

*மார்:* எங்கையிருந்து விமர்சிக்கிறது எண்டது முக்கியமில்லை. எந்த அடிப்படையில இருந்து விமர்சிக்கிறம் எண்டதுதான் முக்கியம். புலியள் எண்டு நாங்கள் யாரைக் குறிப்பிடுகிறோம் எண்டு உமக்கு விளங்கேல்லை எண்டு நினைக்கிறன்.

*நிர்ம:* எல்லாரையும்தான் சொல்லுறியள்.

*தவம்:* இவவுக்குள்ளும் குட்டிப் புலி பூந்திட்டுது போலதான் கிடக்குது.

*மார்:* அதுதான் இல்லை. நாங்கள் புலியெண்டு விமர்சிக்கிறது புலித் தலைமையைத்தான். நீர் புலியெண்டு யாரைக் கருதுறீர்? 83ஆம் ஆண்டு 13 ஆமித் தாக்குதல் காலத்திலை காற்சட்டை இல்லாமல் ஓடித் திரிஞ்சதுகள் எல்லாம் இண்டைக்குப் போராடுதுகள் எண்டா என்னெண்டு நினைக்கிறீர்?

*நிர்ம:* விடுதலை கிடைக்கும் வரை தலைமுறை தலைமுறையாகப் போராடுறது தவிர்க்கேலாது.

*மார்:* 'தேசியத் தலைவன்' பிரபாகரன் ஒரு கட்டத்திலை இப்பிடிச் சொன்னது ஞாபகம் வருகுது. தலைமுறைகள் விடுதலைக்குப் போராடுமாய் இருந்தாச் சரிதான். ஆனா…?

*நிர்ம:* அப்ப முசுப்பாத்திக்கே போராடிச் சாகுதுகள்.

*மார்:* ஏன் கோவப்படுறீர்?

*நிர்ம:* பின்ன என்ன. உங்கடை கதையைக் கேட்க உடம்பெல்லாம் எரியுது.

*தவம்:* உடம்பெல்லாம் எரியுதோ. மிளகாய்த்தூளை அள்ளித் தடவும். எரிவு குறையும்.

*மார்:* சும்மா பகிடியை விட்டிட்டு, போராடிக் கொண்டிருக்கிறவர்கள் விடுதலை உணர்வோடைதான் இயக்கத்துக்குப் போறது. ஆனா அங்கு போனா விடுதலைக்காகப் போராட வேணும் எண்ட சிந்தனையிலும் பார்க்க 'தலைவர்' சொன்னால் எதுவும் செய்ய வேணுமெண்ட சிந்தனைதான் வளர்க்கப்படுகுது. புலி இயக்கத்தின்ரை நலனுக்காக எதுவும் செய்யவேணும் எண்ட நிலையிலை வளர்க்கப்படுயினம். மாற்று இயக்கப் போராளிகள், மாற்றுக் கருத்துடையோர் 'துரோகிகள்' , அவர்களைச் சுடவேணும் எண்ட நிலையிலை வளர்க்கப்படுயினம். 'மாவீரர் விழாவைக் குழப்ப முயன்ற மூவரை அடித்துக் கொன்

www.tamilarangam.net

றோம்', 'யாராக இருந்தாலும் தவறு எனத் தெரிந்தால் சுடவேணு ம்' இப்படி மாவீரர் தினவிழாவில் சிறுவர்களுக்கு உரையாற்றுவதிலி ருந்து போராளிகள் எப்படி வளர்த் தெடுக்கப்படுகிறார்கள் என்பதை உணர்ந்துகொள்ளலாம்.அதோடை இலங்கையரசின்ரை ஒடுக்குமுறை தவிர்க்கேலாமல் புலியோடை சன ங்களை இணைக்குது. பிரச்சினை குறைஞ்ச இடங்களிலை புலி 'கண் ணிவெடி' வைச்சு ஆக்களைச் சேக் குது. இதுகள் பலிக்கடாக்களாக புலிகளின்ரை 'சமரச அழைப்புக் கான' துரோக அரசியலுக்கு பயன் படுத்தப்படுயினம். எண்டைக்கு எங்கடை விவாதத்திற்குள்ளாலை முண்டாவது நிலை உருவாகி நடை முறையோடு கூடிய அரசியலைப் பின்பற்றுதோ அண்டைக்கு இந் தப் புலியின்ரை பம்மாத்து எடு படாது.

*நிர்ம:* உதெல்லாம் நடக்கிற காரியமே?

*மார்:* நடக்காது எண்டது இயங்கி யலையே மறுக்கிற போக்கு. ஆனால் புலிகளின்ரை பாலிஸப் போக்குகளுக்கெதிராகப் போராடி புலி இயக்கம் பற்றிய மாயையிலி ருந்து எம்மை மீட்டெடுக்க வேண் டிய நாங்கள் புலியின்ரை கோட்டை இராணுவத் தாக்குதலை வரவேற் பதிலும், ஆனையிறவுத் தாக்குதலு க்கு கொல்லைப்புறத்தால் போயி ருந்தால் இராணுவ முகாமைப் பிடி ச்சிருக்கலாம் எண்டு இராணுவ ஆலோசனை கூறுவதிலும் நேரத் தையும், பக்கங்களையும் வீணடிச்சா



*"வெளிநாட்டு மனித உரிமைக்குழுக் கள் எல்லாம் வந்து பாத்திட்டுப் போய், 86 மில்லியன் டொலறும் கிடைச்சிட்டுது. இனி நீங்கள் வெளியாலை வந்து வேலையைத் தொடரலாமெண்டு சனாதிபதி சொல்லச் சொன்னார்"*

– இன்னன்னா

www.tamilarangam.net

'போராட்டம் என்டால் கொல்லுற துதான்' என்ட புலியளின்ரை சித் தாந்தத்தில் இருந்து எங்களை மீட் டெடுக்க நாளெடுக்கும். ஆனாச் சாத்தியப்படாமப் போகாது.

*தவம்:* பிரஜைகளின் அரசியல், இராணுவ ஆலோசனைகளைப் புலித் தலைமை பாத்துதெண்டால் கூப்பிட்டு நல்ல 'போல்ற்' குடுப் பாங்கள் என்ன.

*நிர்ம:* அப்ப கோட்டை, ஆனையி றவுத் தாக்குதல்களை விமர்சிக்கி றது பிழையெண்டுறியளோ?

*மார்:* பிழையெண்டில்லை. அது எங்கடை முக்கிய வேலையில்லை என்டுறன். 83ஆம் ஆண்டு தாக்கு தல்லை செல்லக்கிளி செத்தவிதம் பற்றி இப்பவும் புலிப் பத்திரிகை யில எழுதுறாங்கள் என்டா கோட் டைத் தாக்குதலைச் சும்மா விடுவா ங்களே. வைச்சு வாங்குவாங் கெண்டு வாங்குவாங்கள். வீரகேசரி, தினகரனை விரிச்சா அரசு தரப் பான செய்தியள். புலிப் பத்திரிகை யளை விரிச்சால் தாக்குதல் பற்றிய வரைபடங்களுடன் விளக்கம். இது களே தாக்குதலை நேர பாத்த மாதிரிக் கிடக்குது. துண்டில்லை ஏதாவது புதிசா வரும் எண்டு விரிச்சுப் பாத்தா அதேதான்.

*நிர்ம:* நீங்கள் என்ன சொல்லவாறி யளெண்டு விளங்கேல்லை.

*மார்:* என்ன சொல்லவாறனெண் டால் புலி பற்றிய எமது மதிப்பீடு என்ன? அரசு குறித்த எமது மதிப் பீடு என்ன? ஏனைய இயக்கங்கள் குறித்த எமது மதிப்பீடு என்ன? என்பவற்றை முன்வைத்து நாம் சார்ந்த அரசியல் கருத்துகளை விவாதத்திற்குட்படுத்தி அதற்கூ டான வேலைத் திட்டங்களை வகுக் கிறதுதான் நாங்கள் செய்யவேண்டி யது. அரசின்ரை, புலியின்ரை ஏனைய இயக்கங்களின்ரை அரசி யல் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி அதற்கூடாக இன்றைய ஒவ்வொரு அரசியல், இராணுவ நடவடிக்கைக ளுக்குள்ளும் இருக்கும் நரித்தனங் களை வெளிக்கொண்டு வரவேணும். அதைவிட்டுவிட்டு இராணுவ வெற் றிகளை 'நிறுத்துப்' பார்ப்பதி லேயே பிரஜைகள் பக்கங்களை வீணடிக்கினம். இண்டைய எங் கடை பொறுப்பை பிரஜைகள் உண ரேலையோ தெரியேலை.

*தவம்:* இதிலை ஒரு விஷயத்தை நீங்கள் சொல்லேலை.

*மார்:* என்ன?

*தவம்:* கோட்டை புலியளாலை சுற்றிவளைக்கப்பட்ட நிலையி லேயே இராணுவம் வெளியேறியி ருக்கிறது. ஆனால் இராணுவம் வெளியேறைக்கை எந்தவிதமான தாக்குதலும் நடக்கேலை. இந்தச் சமயத்தில் தாக்குதல் நடந்ததாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏப்ரல் மாத

# இரவல் தூண்டிலில்...

* "பெண்கள் படைப்பில் பெண்கள்"

*பெண் எழுத்தாளர்கள் தங்கள் நாவல்களில் பெண்களை எப்படிச் சித்தரித்துள்ளார்கள் என்பது பற்றி ப்ரஸன்னா ராமசாமி, அன்னை தெரஸா மகளிர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக் கருத்தரங்கில் கூறியவைகள்.*

புலிகூட கோட்டை இராணுவமுகாம் கைப்பற்றினது சம்பந்தமான அறிக்கையிலை தெரிவிக்கேலை என்டா இராணுவம் வெளியேறைக்கை புலி என்ன செய்தது? புலி தாக்காதத ற்கான காரணங்கள் என்ன?. அதோட ஆனையிறவு தாக்குதல்லை இதுதான் இறுதியுத்தம் எண்டு சொல்லி எத்தனை சாதாரண சனங்களைக்கொண்டு இராணுவம் புதைச் சுவைச்ச கண்ணிவெடிகளை அகற்றுவிச்சவங்கள். சனம் காலுமல்லாமல் , கையுமில்லாமல் கிடக்குதுகள். இதுகளுக்கை கிடக்கிற சனங்களிலை அக்றையற்ற தன்மையை, கொடுரத்தை எல்லாம் முட்டை கட்டி வைச்சுப்போட்டு கொல்லைப் புறத்தாலை போயிருந்தா முகாமைப் பிடிச்சிருக்கலாம் எண்டும், புலியின்ரை போராட்டத்திலை மக்களின்ரை நலன் பிணைஞ்சிருக்குது எண்டும் விளக்கம் குடுக்கினம். இதுகளை என்னெண்டு சொல்லுறது?

*மார்:* அது புலியின்ரை அரசியல் எண்ட மாதிரி இது பிரஜைகளின்ரை அரசியல் எண்டு வைச்சுக் கொள்ளுங்கோவன்.

*நிர்ம:* பிரஜைகள் இவ்வளவு பிரச்சினைக்குள்ளும் இருந்து எழுதியினம். நீங்கள் சோபாவிலை சாஞ்சிருந்துகொண்டு விமர்சிக்கிறியள்.

*மார்:* பிரஜைகள் பல இடிபாடுகளுக்கிடையிலை இருந்து எழுதியினம் எண்டது உண்மைதான். ஆனால் அதை ஆதரிக்க வேணுமெண்டோ, விமர்சிக்கக் கூடாதெண்டோ இல்லை.

www.tamilarangam.net

*நிர்ம:* அப்ப உங்கடை கதையைப் பாத்தா மொத்தத்திலை இது அழிவுயுத்தம் எண்ட மாதிரியெல்லோ கிடக்குது.

*நிர்ம:* புலிகள் தங்கடை நலனுக்காகத்தான் போராடுறாங்கள். ஆனா அதிலை சனங்களின்ரை நலனும் அடங்கியிருக்கு.

*மார்:* அதென்ன மாதிரி. அழிவு யுத்தமேதான். ஒரு யுத்தம் தடுப்பு யுத்தமாக இருந்தாலும் சரி, விடுதலை யுத்தமாக இருந்தாலும் சரி அது மக்களின்ரை உணர்வுபூர்வமான பங்களிப்போடும், மக்களினுடைய நலனோடும் சம்பந்தப்பட்டது. ஆனால் புலிகளுடனான மக்களுடைய உறவு தவிர்க்கமுடியாத, விருப்பத்திற்கு மாறான உறவுதான். போராட்டத்தின் நேரடி பங்களிப்பும் சரி, உதவிகளும் சரி பெரும்பாலும் உணர்வுபூர்வமாகப் பெறப்படுவதில்லை. அப்படி பெறுவதற்கான ஒர்நிலையை உருவாக்கப் புலியும் தயாரில்லை. ஒண்டில் கவர்ச்சி அல்லது பலவந்தம். ஏனைய விடுதலை உணர்வுள்ள சக்திகளை ஒரு சரியான போராட்டப் பாதையை வகுக்கமுடியாமல் தடுத்தும் மக்கள் குரல்களாக எழும் ஜனநாயகசக்திகளை அழித்தும், அகதிகளுக்காகக் கொண்டு செல்லும் உணவுகளில் கூட வரி விதித்தும் அடிப்படைத் தேவைகளில் அக்கறையற்று ஆயுத வாழ்க்கை வாழும் புலித் தலைமை மக்களைக் காப்பதற்கான தடுப்பு யுத்தத்தில் ஈடுபடுகிறது என்பதைவிட பகிடி ஒண்டும் இருக்காது எண்டு நினைக்கிறன்.

*மார்:* இது கணிதமோ, லொஜிக்கோ அல்ல பால் பண்ணுவதற்காக நிறுவுவதற்கு. இது ஒரு தேசிய இனம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. புலிகளால் தமிழீழத்திற்கான போராட்டமாக இதை விஸ்தரிக்க முடியாது என்பதை பிரஜைகளே ஒப்புக்கொள்கின்றனர். இன்றைய யுத்தம் ஏற்கெனவே நான் பல தடவை சொன்னமாதிரி 'சமரச அழைப்புக்கான' யுத்தம். இதற்கூடாக அரசு-புலி ஆகியோரின் பலவீனங்களுக்கூடாக வரும் அரசியல் தீர்வில் தமிழ்த் தேசிய இனத்தின் சார்பில் யார் அங்கம் வகித்தாலும் அது தமிழ்த் தேசிய இனத்தை அடக்கியொடுக்கி மத்திய அரசிற்கு தனது விசுவாசத்தைக் காட்டும். பின்பு மத்திய அரசு-மாநில அரசு தமது பொருளாதார சிக்கல்களை முடிமறைக்க புதுவடிவில் இனவாதத்தை கட்டவிழ்த்துவிடும். இதன் மூலம் ஒடுக்குமுறை விஸ்தரிக்கப்படுவதை தவிர ஒண்டுமே நடக்காது.

* வி.நடராஜன் *

*(இறுதிப் பகுதி அடுத்த கலத்தில்)*

www.tamilarangam.net

# சப்தமில்லையேல் சம்பவமில்லை

சப்தமில்லையேல்
சம்பவமில்லை.
உரத்துக் குரலிடு
"விய வோலன் (Wir wollen
ரமில் ஈழம்" (Tamil Eelam .1

கருகிக் கிடக்கும்
உடலின் படத்தைக்
காட்சிக்காக
உயரே தூக்கு !

பாலியல் வெறிக்குப்
பலியான
பெண்களின் கதறலை
கசற்றுத் தகட்டில்
விற்பனையாக்கு !

சுடலையாய்ப் போன
தேசத்து விம்மலை
சுருதிப் பெட்டியுள்
பாடலாய்ச் சமர்ப்பி !

உஷ்ணவலயத்
தீயைத் தணிப்பதாய்
குளிர் வலயத்துள்
கூக்குரல் போடு
" வீ வோன்ற் (We want
ரமில் ஈழம் " (Tamil Eelam .2

சிவனிற்கு
இலஞ்சமாய்
திருகோணமலையின்
சரித்திர ஹீரோ
தன் தலை கொய்து
இராகமிசைத்ததாய்க்
கதை - இன்று -

அரக்கப் பரம்பலின்
அடுத்த சரித்திரம்

அத்தனை உயிர்களும்
தலைமைக்கு இலஞ்சம்

www.tamilarangam.net

நாட்டை எரிக்கும்
தீயின் நாதம்


காற்றைச் சுழற்றிடும்
பிணங்களின் வாடை

மயானத்துள்
மலரும் - ஓர்
தனிப் பூமி

சப்தமில்லையேல்
சம்பவமில்லை
உரத்துக் குரலிடு
" நா வூலோங் (Nous voulons
ரமில் ஈழம்" (Tamil Eelam .3

* சித்தி *

நாம் விரும்புவது தமிழ் ஈழம் என்பது
1. டொச் 2. ஆங்கிலம் 3. பிரெஞ்ச் மொழிகளில்.



www.tamilarangam.net

ஈழத்திலிருந்து



# தேசத்தின் குறிப்புகள்

பிரஜைகள்

அன்பான வாசகர்களுக்கு பிரஜைகளின் 3 மாதங்கள் பிந்திய புத்தாண்டு வாழ்த்துகள். இதுகாறும் வெளிவந்த குறிப்புகளைத் தொடர்ந்து படித்தும், விமர்சித்தும் வந்த உங்களுடன் ஒருசில வார்த்தைகளைப் பகிர்ந்துகொண்டு அப்பாற் செல்வது நல்லது என்று நினைக்கின்றோம்.

முதலாவதாக, குறிப்புகள் சம்பந்தமாகப் பலவிதமான விமர்சனங்கள், தாக்குதல்கள், பாராட்டுகள்(!)... என்பன கிடைத்துள்ள போதிலும் அவற்றில் கவனத்திற்குரிய முக்கியமான விடயம் பிரஜைகள் புலிகளுக்கு வக்காலத்து வாங்குபவர்கள் என்பது! இந்தத் தப்பப்பிராயம் எழுவதற்குக் காரணம் என்ன என்பதை இதுவரை நாம் எழுதிய குறிப்புகளைத் திரும்பவும், திரும்பவும் படித்த பின்பும்கூட எம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் இன்று பல ஐரோப்பிய பத்திரிகைகளிலும் உள்ளூர் அரசியற் கட்சிகளிடையேயும் நிலவுகின்ற பொதுப்போக்கான 'தாக்குதல்' வடிவில் நாங்கள் செயற்படவில்லை என்பது உண்மையே. புலிகளைத் 'தாக்குவது' எங்களைப் பொறுத்தவரை வெறும் உணர்வு சம்பந்தப்பட்டதொன்றல்ல. எனவே எங்களது அணுகுமுறை மற்றவர்களிடமிருந்து வேறுபடுகிறதுதான்.

ஆனால் வேறெந்தப் பத்திரிகைகட்கும் சற்றும் குறைவில்லாத விதத்தில் நாங்கள் புலிகளின் மக்கள் விரோத, சனனாயக விரோத, பாஸிஸத்தன்மை வாய்ந்த நடவடிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கைகளை அம்பலப்படுத்தியுள்ளோம். அம்பலப்படுத்துவோம்.

நமது தேசத்தின் நிலைமை பற்றிய பொறுப்புணர்வும், அடுத்தது என்ன என்பது பற்றிய தேடலும் இருப்பவர்களுக்கு 'புலிகளைத் தாக்குவது' ஒரு திட்டமாக இருக்கமுடியாது. புலிகளது அரசியலை இனங்காண்பது, மாற்று அரசியலை முன்வைப்பது என்பதே அவசியமாகும். இந்த அடிப்படையில் சிந்திப்பவர்கள் கண்மூடித்தனமான அல்லது நிதானமற்ற தாக்குதலில் ஈடுபடமுடியாது. ஏனென்றால், இவை எத்தகைய பலனையும் தரப் போவதில்லை. மாறாக மேலும், மேலும் புலிகளின் தவறான பக்கங்களையும் அவர்களே நியாயப்படுத்திக்கொள்ளவே உதவும்!

புலிகளுக்கு வக்காலத்து வாங்கும் நோக்கமோ அவசியமோ எங்களுக்கு ஒருபோதும் இருந்ததில்லை; இருக்கப் போவதுமில்லை. அப்படி நாங்கள் யாருக்காவது வக்காலத்து வாங்குகிறோம் என்றால், அது புதிதாக உருவாகவேண்டியதென நாங்கள் கருதும் 'மூன்றாவது பாதைக்குத்தான்'! மூன்றாவது பாதையை இனங்கண்டு எமது தேசவிடுதலைக்கான அடுத்த கட்டத்தை தொடங்கும் பணியில் எம்மாலியன்றளவு ஈடுபடுவதே எமது நோக்கமாகும்.

நோக்கமற்ற பத்திரிகையாளர்களைப் போல அதனால்தான் நாங்கள் எழுதுவதில்லை. எழுத முடிவதில்லை.

புலிகளைத் தேசிய விடுதலையைச் சாதிக்கப்போகிற சக்திகளாக நாங்கள் ஒருபோதும் நம்பியதில்லை. நம்பவுமில்லை. அவர்களது அரசியலில் 'விடுதலை'க்கான அம்சம் இல்லாததால் அது வெறும் 'தடுப்புக்கான தேசிய யுத்தமாக' மட்டுமே இருக்கும். இதற்குமேல் அதனால் வளரமுடியாது. பேச்சுவார்த்தைகளும், போர்நிறுத்தங்களும், போரும் என்று புலியின் நடவடிக்கைகள் தேக்கத்தை உடைக்க முடியாமல் தடுமாறிக்கொண்டேயிருக்கும். எனவேதான் அரசியல் ரீதியான மாறுதல், புதிய பாய்ச்சல் அவசியம் என்று நாம் கருதுகிறோம். புதிய மூன்றாவது பாதை ஒன்று உருவாகவேண்டும் என்று நினைக்கிறோம், என்று எழுதினோம்.

அதனால்தான் நாம் திறந்த, பகிரங்க விவாதம் அவசியம் என்றும் எல்லாவற்றையும் கேள்விக்குள்ளாக்குவோம் என்றும் எழுதி வருகிறோம்.

கருத்துகளை சுதந்திரமாக வளரவிடுவதும், அவற்றை எந்த முற்சாய்வுகளுமின்றி ஆய்வுக்குட்படுத்தி விவாதிப்பதும் அவசியம். அப்

www.tamilarangam.net

போதுதான் உண்மையை நாம் தரிசிக்க முடியும். உண்மை புறவயமானது. அது எமது விருப்பு வெறுப்புகட்கு அப்பாற்பட்டு இருப்பது. அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எமது விருப்பத்திற்கேற்ப உண்மையைப் புரிந்துகொண்டுவிட்டு அதுதான் உண்மை என்று நாம் சாதிக்கமுடியாது.

வரலாறு எமது முடிவுகள் தவறானதா இல்லையா என்பதை விரைவிலேயே நிரூபித்துவிடும்.


எமக்கு விருப்பமானவை மட்டுமே எழுதப்பட, பேசப்பட, விவாதிக்கப்பட வேண்டும், மற்றவை எழுதப்பட, பேசப்பட, விவாதிக்கப்பட கூடாது என்று நினைப்பதுதான் கருத்துச் சுதந்திர மறுப்பின் தொடக்கப்புள்ளி. மாற்றுக் கருத்துகளை வைத்திருப்பதைச் சகிக்காத, அனுமதிக்காத ஒரு சமுகம் தனது விடுதலையை ஒருபோதும் பெற்றுவிட முடியாது.

வணக்கம்.

மீண்டும் அடுத்த கலத்தில் சந்திப்போம்.

– பிரஜைகள்

(33ஆம் பக்கத் தொடர்ச்சி)







www.tamilarangam.net




# மகளைக் கடத்திய தகப்பன்!

முன்ஸ்ரர் நகரத்திலுள்ள ஒரு அகதிகள் முகாம். மணி இரவு எட்டரையிருக்கும். பிரான்ஸ் நாட்டு இலக்கத் தகட்டைக்கொண்ட கார் ஒன்று வந்து அந்த அகதி முகாம் முன்பாக நிறுத்தப்பட்டது. காரிலிருந்து 6 தடியர்கள் – தமிழர்கள் தான் – இறங்கினார்கள். அவர்கள் கைகளில் பிஸ்ரல் மற்றும் கைக் கோடரி போன்ற பயங்கரமான ஆயுதங்கள்.

காரிலிருந்து இறங்கியவர்கள் தமிழ்க் குடும்பம் ஒன்றின் அறைக் கதவைத் தட்டித் திறந்து உள்ளே புகுந்தார்கள். இவர்களையும், ஆயுதங்களையும் பார்த்த அங்கிருந்தவர்கள் பயந்து அலறினார்கள். அவர்களை மிரட்டிய ஆயுதபாணிக் குழு அக் குடும்பத்தினரின் 20 வயதான பெண்பிள்ளையைக் கதறக் கதறப் பலவந்தமாக இழுத்துச் சென்று காருக்குள் திணித்துக் கொண்டு பறந்துவிட்டது.

இச் சம்பவம் உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. முன்ஸ்ரரை அண்மிய நகரமான ஆலன் எனும் இடத்தில் பொலிஸாரினால் இக் கார் தடுத்து நிறுத்தப்பட்டு, கடத்தப்பட்ட பெண் மீட்கப்பட்டாள். காருக்குள்ளிருந்த 2 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

மீட்கப்பட்ட பெண் தெரிவித்த தகவலின்படி அவளுக்கும், அவளுடைய தந்தைக்குமிடையில் சில காலமாக ஒரு பிரச்சினை இருந்து வருகிறதாம். அது அப் பெண்ணின்

www.tamilarangam.net

காதலினால் தோன்றியுள்ளது. காரணம் அந்தப் பெண் காதலிப்பது தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த இளைஞனை! இக் காதலைத் துண்டிப்பதற்காகவே தகப்பனால் ஆயுத பாணிக் குழு கூலிக்கு அமர்த்தப் பட்டு சொந்த மகனே கடத்தவைக் கப்பட்டான்.

இத்தகைய சம்பவங்களை யாழ்ப்பாணத்தில் அடிக்கடி சந்தித்திருப்போம். சென்னையில் நடப்பதாக அறிந்திருப்போம். ஆனால் ஜேர்மனியில், அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் தமிழ் அகதிகளிடையேயும் தொடர்வது ஆச்சரியப்பட வேண்டிய அல்ல எச்சரிக்கையடைய வேண்டிய விடயமாகும்.

இந்தவகைப்பட்ட சாதிச் சண்டித்தனங்கள் தமிழர்கள் வாழும் ஜேர்மனியின் பல நகரங்களிலும் ஆங்காங்கே நடந்துகொண்டுதானிருக்கின்றன. 2 வருடங்களுக்கு முன்பு எலன் நகரில் தொடர்ச்சியாகப் பல நாட்களுக்கு சாதி அடிப்படையிலான குழு மோதல் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. இச் சம்பவங்களில் பல ஜேர்மனியப் பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் வெளியிடப் பட்டு, அவர்கள் நோக்கிற்கேற்ப தென்னாசிய நாட்டவர்கள் கேலியாக்கப்படுகிறார்கள்.

அடிபாட்டு சம்பவங்களுடன், தாழ்த்தப்பட்டவர்களை இழிவு செய்வதும், அலட்சியம் செய்வதும், சாதிப் பிரிவினைகளைக் குறிப்பிட்டுச் சம்பாஷிப்பதும் நடைபெறாமலில்லை.

இலங்கையிலிருந்தபோது கடின உழைப்பில் ஈடுபட்டாலும் உரிய ஊதியமின்றி வறுமைக்குள் தள்ளப் பட்டிருந்தவர்கள் மேற்கு நாடுகளில் தமது கடின உழைப்பின் மூலம் அகதித் தொழிலாளிக்குரிய ஊதியத்தில் தம்மைத் தாழ்த்துபவர்களுக்குச் சமனான வாழ்க்கைத் தரத்தை அமைத்துக் கொள்ளும்போது, "மேற்சாதி" கருத்தியலால் ஆட் கொள்ளப்பட்டவர்களுக்கு இப் பொருளாதார-வாழ்க்கைச் சம நிலையை ஏற்றுக்கொள்வதென்பது பொறுக்க முடியாததாகவேயிருக்கிறது. யாழ்ப்பாணத்தவருக்கு இது விஷேஷ குணம்!

இலங்கையில் இருந்தபோது தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களின் வறுமையைக் காரணம் காட்டியும், தொடர்ந்தும் அவர்களைக் குறைந்த கூலிகளாக வைத்திருக்க வேண்டியும் திருடர்கள், பிச்சைக்காரர்கள், ஊத்தைகள் என்று எக்காளமிட்ட சாதித் திமிர்க்காரர்கள் இன்று மேலைநாடுகளிலும் அதையே சொல்லக் காரணமில்லாமற் போகவே, அவர்களின் குலம், கோத்திரங்களை எப்படியெல்லாமோ துப்பறிந்து, சாதிப் பெயர்களைக் குறிப்பிட்டு இழிவு படுத்துவ

www.tamilarangam.net

திலும், கேலி செய்வதிலும், அரட்டையடிப்பதிலும், புறக்கணிப்பதிலும் தங்கள் சாதி வெறிக்குத் தீனி போட்டுக் கொள்கிறார்கள்.

இதன் ஒரு பகுதியாகத்தான் சாதித் திமிரடங்கிய தகப்பனுக்கு தன் மகளின் காதலை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. சொந்த மகளையே ஆள் வைத்துக் கடத்துவிக்குமளவிற்கு சாதிவெறி பகுத்தறிவை இல்லாமற் செய்திருக்கிறது.

தமிழ் மக்களின் போராட்டம் மேற்கொண்டு வளர முடியாமல் கொலைக்களத்தையே சுற்றிக் கொண்டிருப்பதற்கு பல காரணங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இவற்றுடன் சேர்த்து இன்றும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் நச்சுக் கருத்தியல்களையும் கவனத்திலெடுத்துக்கொள்ள வேண்டும். இக் கருத்தியல்களை உடைக்கக் கூடிய போராட்டங்களை ஈழத்தில் மட்டுமல்லாது தஞ்சம் கோரிய நாடுகளிலும் முன்னெடுக்க வேண்டிய தேவையிலிருக்கிறோம். பிற்போக்கான நிலப்பிரபுத்துவ, கழிவுக் கலாச்சாரங்களையும், கருத்தியல்களையும் காவிக்கொண்டு "சுதந்திர தாயகத்தை" நிர்ணயிப்பதென்பது சிரிப்புக்கிடமானதல்ல, ஆபத்தான அம்சமே.

– சி.குலசிங்கம்

O O O O

*"பிள்ளையைப் பெத்து, வளர்த்து, எங்களிட்டை அனுப்பாம வெளிநாட்டுக்கு அனுப்பின குற்றச்சாட்டின் கீழ் உங்களைக் கைது செய்யுறம்"*

– *இன்னன்னா*



www.tamilarangam.net

## நூல் அறிமுகம்

" இருபதாம் நூற்றாண்டின் ஈழத்துப் புறநானூறு"

* *இரா.றஜீன்குமார்* * 1991 * 43பக் * 5,-டி.எம் * Susindran N. Straube, Brunsbüttler Damm. 21, 1ooo Berlin 2o, Germany.

*23 கவிதைகள்.*

" காலத்தின் பதிவுகள் "

* *அ.கந்தசாமி+மலையன்பன்+ரதன்* * 1991 * 80பக் * 2,-Ca$ * M.Ragunathan, Box:1o31, Station "F", Toronto, Ontario, M4Y 2T7, Canada.

*3 கவிஞர்களின் 30 கவிதைகள்.*

" எலும்புக்கூடுகளின் ஊர்வலம் "

* *சேரன்* * 1990 * 22பக் * 1,-Ca$ * Thedal.

*8 கவிதைகள்.*

" ஒரு அகதியின் பாடல் "

* *வ.ஐ.ச.ஜெயபாலன்* * 1991 * 49பக் * 7.50,-டி.எம் * Thedal, 566 Parliament St., Tronto, Ontario, M4X 1P8, Canada.

*6 கவிதைகளும், 10 பாடல்களும்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அழிவு யுத்தம் பற்றி...!

புதுக்கணபதிப்பிள்ளை எனது கட்டுரையின் பின் நேரடியாகப் பேச வந்தது குறித்து மகிழ்ச்சியே. ஆயினும் அவர் விவாதிப்பதும், பதிலளிப்பதும் வீண் என்று கருதி பிரசைகளை எதிரியின் பாசறைக்குள் இருந்து எழுதுபவர்கள் என்று முத்திரை குத்திவிட்டு – அதற்கும் அவர் வழமைபோல் எந்த ஆதாரங்களும் தரவில்லை – விலகிவிடுகிறார். வாசகர்கள் மீது கொண்டுள்ள மதிப்பின் காரணமாக அவர் அளித்துள்ள பதிலினைக் குறித்த சில சந்தேகங்களைக் கிளப்புவதுடன் நானும் அமைதிகொள்ளலாம் என நம்புகிறேன்.

'முடிவுகள்' விவாதத்திற்கு அப்பாற்பட்டவை என்ற கருத்து நிலைக்கும்வரை வளர்ச்சிக்கு இடமில்லை. பிரசைகளின் குறிப்புகள் பற்றி நான் எழுதும்.போதும் இந்த அடிப்படையில் நின்றே எழுதினேன். விவாதங்கள் வீணானவை, எமது முடிவுகளே என்றென்றைக்கும் சரியானவை என்ற கண்ணோட்டம் இருக்கும்வரை யதார்த்தம் பற்றிப் பேசுவது வெறும் பேச்சுத்தான்.

1.

தடுப்பு யுத்தம் என்று பிரசைகள் சொன்னதை மையப்படுத்தியே தனது கட்டுரை எழுதப்பட்டது என்று இப்போது அவர் ஒப்புக்கொள்கிறார். நான் 'சேர்க்கஸ்' பாணியில் பிரசைகளின் கருத்தை விளக்க முயன்றதாக குறிப்பிடுகிறார். என்னைவிட நன்றாக பிர்சைகளை விளங்கிக்கொண்ட அவருக்கு புலிகளின் 'அரசியல் தெளிவின்மை'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காரணமாகவே அவர்களது நடவடிக்கைகள் உள்ளன என்று கூறியதாக விளங்கியது எப்படி என்பது எனக்குப் புரியவில்லை.

' புலிகளின் அரசியலில் தடுப்பு யுத்தம் என்பது தெளிவாக இல்லை'

தூண்டிலின் அச்சுப்பிழைகளையும் மீறி இந்த விடயம் தெளிவாக அழுத்தப்பட்டிருப்பதை திறந்த மனதுடன் படிக்கும் எவரும் புரிந்து கொள்ளலாம். நடப்பது சாரத்தில் தடுப்பு யுத்தமே. ஆனால் அதைச் சரியாகச் செய்யும் தெளிவு புலிகளின் முதலாளியத் தேசியவாத அரசியலுக்கு கிடையாது. பதிலாக அது தனது சனநாயக விரோத, மக்களையும் அவர்களது ஐக்கியத்தையும் இட்டு அஞ்சுகிற நிலையிலேயே உள்ளது என்பதால் இத் தடுப்புயுத்தம் முன்னேற முடியாது என்று குறிப்பிடப்பட்டது. அதே வேளை இது முற்றாக அற்றுப் போகப் போவதுமில்லை. தடுப்பு யுத்தம் என்பது சாரத்தில் இருத்தலுக்கான யுத்தமே என்பதே என்னால் குறிப்பிடப்பட்டது. ஹிட்லரின் அரசியல் தெளிவுப் பிரச்சினை இங்கு எழ எந்த நியாயமுமில்லை.

2.
'ஆதிக்க அரசியலின் அழிவுப் பாத்திரத்தை முன்கொணர்வது' முக்கிய கடமை என்பதில் பு.கணபதிப்பிள்ளையிலிருந்து பிரஜைகள் வேறுபடுவதாக அவர் எப்படி முடிவுக்கு வந்தாரோ தெரியவில்லை. பிரச்சினை 'ஆதிக்க அரசியலே அழிவு அரசியல்தான்' என்பதிலல்லவா தொடாங்கியது. அழிவுப்பாத்திரம் அதற்கு உண்டென்பதும் அது தனது சொந்த இருப்பையே அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறதென்பதும் குறிப்புகளில் பலமுறை அழுத்தப்பட்டுள்ளதை நான் படித்திருக்கிறேன். 'சரியான அரசியல் கதைப்பவர்கள்' என்பது நழுவல் வேலையாகியது எப்படி என்பது உண்மையில் எனக்கு இன்னும் விளங்கவில்லை.

3.
கேட்கப்பட்டது அழிவு அரசியலுக்கான 'வரைவிலக்கணம்' அல்ல. அது என்ன என்பதே. முக்கோணம் என்றால் என்ன, வட்டம் என்றால் என்ன என்றோ அல்லது ஏகாதிபத்தியம் என்றால் என்ன என்றோ பள்ளிப்பாடம் சொல்லும் ஆசிரியரிடம் கேட்கப்பட்ட ஒரு வரைவிலக்கணமாக பு.கணபதிப்பிள்ளை இதை இழிவுபடுத்தியிருக்கத் தேவையில்லை. கேள்வி அதன் அரசியல் அம்சம் என்ன, அதன் போக்கு என்ன, விளைவுகள் என்ன என்ற நடைமுறை சார்ந்ததொன்றாகும்.

'இறுதியில் அழிவை மையப்படுத்திய' அரசியல் அழிவு அரசியல் என்று விளக்கப்பட்டுள்ளது. இறுதியில் அழிந்துபோவதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அர

சியலா அது அல்லது அந்த அரசிய லின் போக்கு அழிவுத்தன்மையா னதா என்பதை - இதுவே எழுப் பப்பட்ட கேள்வி - இன்னமும் பு. கணபதிப்பிள்ளை விளக்கவில்லை. அவர் கூறும் 'வரைவிலக்கணம்' புலிகளின் இன்றைய அரசியல் போக்கு அழிவை நோக்கி நகர்கி றது என்பதே. இது புலிகளது அர சியலின் ஒரு அம்சம் பற்றிய அவரே சொல்கிற 'பாத்திரம்' பற் றிய பிரச்சினை என்பதே எனது கருத்து. அழிவை நோக்கிச் செல் கிறது என்பது ஒருவகை விமர்சன ரீதியான பார்வை. அது திட்டமி ட்டே அழிவை நோக்கிச் செல்கிறது என்று வலியுறுத்துவதையும், இப் பார்வையையும் ஒன்றாகப் போட் டுக் குழம்பி அபிப்பிராயம் சொல் கிறார் பு.கணபதிப்பிள்ளை என் பதே எனது கருத்தாக இருந்தது.

இதை இன்னமும் அவரது நீண்ட 'வரைவிலக்கணம்' விளக்க வில்லை.

4.

'சிங்களப் பேரினவாதக் கருத்து கட்கு எமது மக்களை மூளைச்சலவை செய்யும் ஆற்றல் இல்லை' என்பதால் அவை பற்றிக் குறிப்பிடு வது வீண் என்பது பு.கணபதிப்பிள் ளையின் வாதம். இதற்கு இத்தனை நாள் போராட்டத்தின் அர்த்தத்தை அவர் சாட்சிக்கு இழுக்கிறார்.

பேரினவாதத்தின் தன்மை பற் றிய புரிதலும், அதன் நோக்கங்க ளின் திட்டமிட்ட தன்மை பற்றிய மதிப்பீடும் இல்லாத மேலெழுந்த



"கலியாணத்துக்கு எல்லா விசயமும் சரி வந்திட்டுது. ஆனா கடைசியா மாப்பிளை ஒரு இயக்கம், பொம் பிளை வேறை இயக்கம் என்டு கண்டுபிடிச்சதிலை குழம்பியிட்டுது"

- இன்னன்னா

www.tamilarangam.net

வாரியான கூட்டணியின் சார்பு இன வாத எதிர்ப்புக் கண்ணோட்டம் போதுமானது என்பது பு.கணபதிப் பிள்ளையின் கருத்து. அதுதான் இன்று யதார்த்தத்தில் உள்ளது. ஆனால் இந்தக் கருத்தமைவுதான் சமரசம், 'சனனாயக வழிக்குத் திரும்பல்', ஊசலாட்டம் போன்ற பலவற்றிற்குக் காரணமாக இருந்து வருகிறது என்பதை அவர் கவனிக் கவில்லை. எமது போராட்டத்தின் தோல்விக்கு காத்திரமான பங்கை அது வகித்துள்ளது. 19 முன்மொழி வுகளை ஜே.ஆர் முன்வைத்தபோது ம், இலங்கை- இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தனபோதும் ஏற்பட்ட ஊச லாட்டமும், அணிசேர்க்கைகளும் இதை விளக்கப் போதுமானவை.

புலிகளை விமர்சித்தால் அரசை ஏன் விமர்சிக்கவில்லை என்று நான் கேள்வி எழுப்பவில்லை. 'கொள்ளிக்கட்டையை எடுத்துக் கொடுக்காவிட்டால் அவன் கொளு த்த மாட்டான்' என்பது போன்ற நிலைப்பாடு பற்றித்தான் கேள்வி எழுப்பினேன்.

இலங்கையரசின் ஒரே 'தவறு' இனவாதம் என்றும் நான் குறிப் பிடவில்லை. ஆனால் அதில் வெடி ப்புகள் ஏற்பட்டுள்ளதும், அதை நாம் (யார் இந்த நாம்?) பயன்படு த்த முடியும் என்பதும்தான் கேள் விக்குள்ளாக்கப்பட்டது.

அனுமானங்கள் தவறாகிவிடும் போது அவற்றிலிருந்து வரும் முடி வுகளும் தவறாகிவிடுகின்றன.

5.

மக்களைப் பற்றி இறுமாப்பாக புலிகளின் பாணியில் நான் எழுதிய தாக இவர் குறிப்பிடுகிறார். கேள் வி மக்களின் சுயாதீனக் குழுக்களது சாதனைகள் பற்றிய இவரது மட்டு மீறிய அபிப்பிராயத்திலிருந்தே எழு ந்தது. மக்களின் அரசியல் ரீதியான ஒன்றிணைப்பு, அவர்களது தன்னி யல்பான போராட்டங்கள் அனைத் தும் அனைத்து இயக்கங்களாலும் ஒடுக்கப்பட்டன. புலிகள் இதைப் படுமோசமாகச் செய்தார்கள். சிக் கல், புலிகளது இராணுவம் மீதான தாக்குதல் மக்களது சுயாதீன குழு நடைமுறையை இல்லாமற் செய்தது என்ற வாதத்திலிருந்தே எழுந்தது. காந்தீயத்தில் என்பதுகளின் தொட க்கத்தில் அரசு கைவைத்தபோதும் இந்தக் கருத்து சிலரால் முன்வைக் கப்பட்டது. அரசிடம் சுயாதீனக் குழுக்களை மதிக்கும் பண்பும், சன னாயகமும் இருந்ததாகக் காட்டு வதையிட்டே கேள்வி எழுப்பப்பட்டது.

பு.கணபதிப்பிள்ளை எனக்கு மக்களைக் குறித்து புலிகளின் பார்வையே இருப்பதாகக் குறிப்பிடு வது பற்றி எனது கட்டுரையின் உள்ளடக்கம் தெளிவாக்கும்.

பிரதேசங்களுடன் உயிருள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்பு வைத்திருப்பவர்களது கருத்து எது, தமது சொந்த மனோ விருப்பங்களுக்கமைய தமது தீர்வுகளை மக்கள் மீது திணிப்பவர்களது கருத்து எது என்பதை காலம் உணர்த்தும். அதுவரை பு.கணபதிப்பிள்ளை பொறுக்கவேண்டியது தவிர்க்கமுடியாதது.

6.
'ஒருவன் எதை விரும்புகிறான் என்பதில் மட்டுமல்ல எதனை வெறுக்கிறான் என்பதிலிருந்தும் தான் ஒருவரது நிலைப்பாடு தீர்மானிக்கப்படுகிறது' என்ற பு.கணபதிப்பிள்ளையின் கருத்தையிட்டு இங்கு பிரச்சினையில்லை.

ஆனால் ஒருவரது விருப்புக்கும், வெறுப்புக்கும் ஒரு தர்க்க ரீதியான உறவு தேவையா இல்லையா என்பதுதான் இங்குள்ள சிக்கல். எமது விருப்பம் - எமது வெறுப்பு என்பன தர்க்க ரீதியில் இணைக்கப்படுவது எமது புரிதலோடு சம்பந்தப்பட்டே. புரிதல் சம்பந்தப்படாத விருப்பும், வெறுப்பும் நடைமுறையின் போக்கில் நீண்டநாள் நிலைக்கமுடியாது.

'நாடற்றவர்கள்' ஆகிவிட்ட பிரசைகள் எழுதும் 'எதிரியின் பாசறைக் குறிப்புகள்' என்னைப் பொறுத்தவரை வலியுறுத்துவது புரிதலையே - நான் மேற்குறிப்பிட்டதையே - தவிர விருப்பு, வெறுப்பு என்ற வெற்று மன உணர்வுகளை அல்ல என்பதை மட்டும் இறுதியாகக் கூறிக்கொள்கிறேன். இவ்வளவும்தான்.

இ.நமச்சிவாயம் (ஈழம்)



"பிரிஞ்சுபோற நாடுகளுக்கு வாழ்த்துச் சொல்லப் போற அமைச்சரோடை ஏன் கனபேர் சேர்ந்து போகினம்?"

"அவை ஆயுதங்கள் விக்க ஓடர் எடுக்கப் போகினம்"

- ராசன்

www.tamilarangam.net

# பூச்சியம்

எம் மனமெல்லாம்
அதுதான்
நிறைந்திருக்கிறது.

எம்,
தமிழ் வான்ம் பூரா
விடிவில்லாப்
பூச்சியம்தான்.

வாழ்க்கையைத்
தேடினோம்
அங்கும்
பூச்சியம்தான்.

வயிற்றின்
பசிக்கும்
பூச்சியம்தான்
பதில்...

வாய்களுக்குள்
உண்மை
உறங்கி
பூச்சியமாகி
இன்றோடு
நாட்கள்
மறந்துவிட்டது.

நினைவுகளை
அசை போட்டால்
உத்தரவில்லாமல்
துப்பாக்கி
பூச்சியமிடும்
உயிருக்கு.

வயிறும்
வரண்டு,
கண்ணும்
வற்றி,


www.tamilarangam.net

நரம்புகளும்
சுருண்டுவிட்டன.

நீதியின்
தராசுகள்
கறள் கட்டி
இப்போது காணாமல்
போய் ஆண்டுகள் பல.

சந்தோஷம் இன்றியே
நாட்கள்
நகர...
விலங்குக்குக்
கூட
எம்மைவிடச் சுதந்திரம்
அதிகம்.
சுதந்திரம் தேடித்
தேடியே அலைந்து
அறுந்த செருப்புகள்
ஒவ்வொரு வீட்டு
மூலைகளுக்குள்ளும்
குவிக்கப்பட்டுக்கிடக்கின்றன.

இன்று
எமது ஈழமண்ணில்
ராஜாங்கமில்லாத
ராஜாக்களின்
பூச்சிய அரசாங்கம்.
இங்கே மனித
உயிருக்கு முடிவாக
பூச்சியமிடுவது
இன்றோ? நாளையோ?



*

இளைய அப்துல்லாஹ் (இலங்கை)

www.tamilarangam.net

சிறுகதை

# பாதை தெரியாப் பயணம்

மெயின் றோட்டின் நாலாம் சந்தி நறுவிழி மரத்தடியில் கூடி நிற்கின்ற சனக் கூட்டத்தின் நடுவே நானும் நிற்கின்றேன்.

ஒவ்வொருவர் முகமும் ஒரே பாவனையிலேயே இருக்கின்றது. காரணம் ஒரே மாதிரியான துன்பத்தையே எல்லோரும் அனுபவித்தார்கள் என்பதால்.

மனிதக்கொலை வெறி பிடித்தவர்களின் மிருகச் செயலினால் தம் வீடு வாசலைவிட்டு திருக்கோயில், தம்பிலுவில் கிராமங்களில் ஒரு மாத காலத்தைக் கழித்துவிட்டு மீண்டும் தம் இருப்பிடம் நோக்கி வந்திருக்கும் என் கிராம மக்கள் ஒவ்வொருவர் முகத்தினையும் பார்க்க என் இதயம் வெடிக்கிறது.

என்ன செய்வார்கள் இவர்கள். வீட்டுக்கொரு பிள்ளையை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு, வெளியில் வராமல் பங்கருக்குள் வாழக் கூடியளவிற்கு வசதியற்றவர்கள் என் கிராம மக்கள். ஒருவேளை உழைத்தால்தான் மறுவேளை வயிறு நிறையும் என்ற நிலையில் வாழ்ந்த இவர்கள் இரண்டு மாதத்தினை அகதிகளாக அயலூரில் கழித்துவிட்டு வந்து தங்கள் வாழ்க்கையைத் தொடங்க வழிதெரியாமல் தவித்து நிற்கின்றார்கள்.

எப்படியெல்லாம் வாழ்ந்தவர்கள் இப்படியாகிவிட்டார்களே. ஏனிந்தக் கொடுமை? வாடி வதங்கிய வயிற்றுடன் நிற்கும் பாண்டிப்போடியார் , கூனிக் குறுகிப்போய் றோட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டோரம் குந்தியிருக்கும் குழந்தை வண்ணக்கர், வார்த்தையின்றி வாயடைத்து நிற்கும் கந்தவனம் வட்டவிதானை ... எல்லோர் முகத்திலும் கவலை. ஒவ்வொருவர் முகத்திலும் வெளியில் சொல்லமுடியாத வேதனையொன்று மனதில் புதைந்து கிடப்பது தெரிகின்றது.

கவணையில் கட்டிய மாடுகள் கழுத்து நெரித்துச் செத்துக் கிடக்கின்றன. முளைத்த பயிர்கள் கருகிச் சருகாகிவிட்டன. நாய், பூனை, கோழி, குருவி அனைத்தும் செத்துக் கிடக்கின்றன. ஊருக்குள்ளிருந்து பிணவாடை அடிக்கின்றது. ஆற்றுத் தொழிலுக்கும் போகமுடியாது ஆறெல்லாம் பிணங்கள் மிதக்கின்றன.

மாடமாளிகையையும், ஆடை ஆபரணங்களையும் இழந்துவிட்டோம் என்ற கவலை இவர்களுக்கில்லை. ஏனெனில் அவைகள் இவர்களிடம் இல்லை. இவர்களின் கவலையெல்லாம் அன்றாடம் தொழில் செய்ய வழியென்ன என்பதுதான்.

கூடி நிற்கும் எல்லோர் முகத்தையும் ஒருதடவை நிமிர்ந்து பார்க்கிறேன்.

"என்ன தம்பி செய்வம். பள்ளை குட்டியளையும் போய்க் கூட்டிவருவமோ இல்லாட்டி ரெண்டு மூண்டு நாளைக்குப் பார்த்துப்போட்டு போய்க் கூட்டிவருவமோ?"

"என்னிட்ட கேக்கையள். நானென்ன சொல்லுறது. நானும் உங்களைப் போல ஒருத்தன்தானே" பாண்டியப் போடியாரின் கேள்விக்கு நான் ஆறுதலாகப் பதில்சொல்கிறேன்.

"அப்ப என்ன தம்பி செய்யுறது. ஆலையடி வேம்புப் பக்கம் பொடியங்கள் நிக்கிறாங்களாம். அவங்களுக்கிட்டப் போய்க் கேப்பமோ"

"தாங்களுக்கு அதிகாரம் கிடைக்கிறதுக்காக இவங்களைச் சண்டை பிடிக்க விட்டிருக்காங்க. இவங்களுக்கிட்டப்போய் நாங்கள் என்ன கேட்கிறது?" நான் எரிச்சலுடன் பதில் சொல்லுகிறேன். எலெக்ரிக் கட்டையில் சாய்ந்து நின்றுகொண்டு சீனித்தம்பி மாஸ்ரரின் கட்டிடச் சுவரில் பார்வையைப் பதியவிடுகின்றேன். சுவரிலுள்ள முத்துமுத்தான பெரிய எழுத்துகள் தெளிவாகத் தெரிகின்றன. எத்தனைவருடம் இருக்கும் இவைகள் எழுதி. நான் எனக்குள்ளேயே கணக்கிடுகின்றேன்.

ஐந்து வருடத்திற்கு மேலாகிறது அவைகள் எழுதப்பட்டு. அனைத்தும் ஆதவனும் நானும் எழுதியது. அரைக்கிலோ அரிசி மோசடி, ஆலைய ஊழல்,கோப்புறட்டிக் களவு, போடியாரின் போக்கிரித்தனம்... இப்படி எவ்வளவோ விசயங்களைப் பற்றி அதில் எழுதப்பட்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருக்கின்றது. இப்போது நடக்கும் அராஜகங்களுக்கும், அநியாயங்களுக்கும் அவைகள் எவ்வளவோ சின்ன விசயம்.

இப்போதும் என்னால் எழுத முடியாமலில்லை. ஆனால் எழுதியவர்களும், ஏனென்று கேட்டவர்களும் என்ன ஆனார்கள் என்பதை நினைத்து எதுவும் செய்யமுடியாமல் இருக்கின்றேன்.

பின்புறமாகத் தோளில் ஒரு கரம் விழுகிறது. திரும்பிப் பார்க்கிறேன். ஆதவன்! எப்போதும் போலச் சிரித்துக்கொண்டு நிற்கிறான்.

திடீரென ஏற்பட்ட நிலைமையால் ஒருவரையொருவர் சந்திக்க முடியாமல், திக்குத் தெரியாமல் ஓடியதால் இரண்டு மாதத்தின் பின்பு இன்றுதான் ஆதவனைக் காணுகின்றேன்.

என் தோளில் விழுந்த கையை மெதுவாகப் பற்றிக் கீழே இறக்குகின்றேன். இருவரின் கைகளும் பிரியவில்லை. அவன் என் முகத்தைப் பார்க்கிறான். என்னால் அவன் முகத்தைப் பார்க்க முடியாத அளவிற்கு கண்களில் நீர் நிரம்புகிறது.

அவன் என் கையை இறுகப் பிடிக்கிறான். அதில் ஆதரவு தெரிகிறது. நான் சனத்தைவிட்டு விலகி அவனுடன் தனியாக வருகிறேன்.

"நான் எல்லாம் கேள்விப்பட்



www.tamilarangam.net

டன். வாவன் ஊட்ட போவம்"

"ஆற்ற வீட்ட?" ஆதவனின் அழைப்பையடுத்து நான் அவனிடம் கேட்கிறேன்.

"உங்கட ஊட்டதான்"

"இல்ல ஆதவன். என்னால் அங்க போக ஏலாது. என்ட அக்கா படுறபாட்ட என்னால பாக்க ஏலாது. உன்னது ஒரேயொரு மகன். அதுவும் பதினொரு வயதுப் பாலக னைக் கொண்டுபோய் பலிகுடுத்திட் டாங்களே. இத என்னெண்டடா அக்கா தாங்குவா" என்னால் அழு கையைக் கட்டுப்படுத்த முடிய வில்லை.

"என்ன செய்யுறது. உங்கட குடும்பத்துக்கு மட்டும்தானோ இந் தக் கதி. ஊர்ல எல்லாருக்கும்தான்"

ஆதவன் மீண்டும் ஆறுதல் வார்த்தைகளைத் தேடுகின்றான்.

"ஓம் ஆதவன். மற்றவங்களு க்கு நடந்தால் பாவம் எண்டு பரி தாபப்படமட்டும் முடியுது. ஆனா அது எங்களுக்கு நடந்தா தாங்க முடியாமல் இருக்கே. உனக்குத் தெரியும்தானே பிரஷாத்த. நீ வாற போற நேரமெல்லாம் அவனோட தனகி விளையாடுவாய். அப்படிப் பட்ட சின்னப்பிள்ளையக் கூட்டிக் கொண்டுபோய்..."

என் வார்த்தைகள் தடம் புரளு கின்றதை அறிந்த ஆதவன் என் தோளில் கைபோட்டு மெதுவாகத் தட்டுகிறான்.

"நான் உங்கட அக்காட முகத் தை ஒருக்கா பாக்கவேணும். வாவன்"

"நான் வரயில்லை. இதுல நிக் கிறன். நீ போயிற்று வா"

நான் வளவின் கேற்றடியில் நின்றுகொண்டு ஆதவனை உள்ளே போகச் சொல்லுகின்றேன். அவன் விடுவது போலில்லை. என்னையும் இழுக்கின்றான். சா வீட்டுக்குச் சனங்கள் போவதும், வருவதுமாக இருக்கின்றார்கள். மற்றைய சா வீடுகளுக்கும் தாங்கள் தலைகளைக் காட்டிவிட வேண்டுமென்ற அவச ரம் அவர்களுக்கு. நானும் ஆதவ னும் வாசலுக்குப் போகின்றோம்.

தம்பியை இழந்த வேதனையில் என் மருமகன்மார் அழுவதற்குச் சக்தியற்று விசும்பி, விசும்பிக் கொண்டிருக்கின்றார்கள். என் மற் றத் தமக்கைகள் முகத்தில் சீலை போட்டு முழங்காலில் முகம் முட் டித் திண்ணையில் இருக்கின்றார் கள். மார்புச் சீலையை நிலத்தில் விரியப்போட்டு மல்லாந்து படுத்துக் கிடக்கிறா பெத்தா.

பிரஷாத் இருந்தால் இன்னே ரம் பெத்தாவால் இப்படிப் படுக்க

www.tamilarangam.net

"உங்களுக்கு அடிச்சுப்போட்டு வெளியிலை போன அப்பா இயக் கப் பெடியங்களைக் கண்டிட்டு பய ந்து ஓடியந்ததை நான் பாத்திட்டன்"

- இன்னன்னா



முடியுமோ. எவ்வளவு சேட்டைகள் செய்திருப்பான்.

திண்ணைப்படியில் நானும், ஆதவனும் ஏறுவதை அக்கா கண்டு விட்டா.

"எண்ட மகனே உன்னோட விளையாட ஆதவன் வந்திருக் கானே. நீ எங்கடா மகனே போயி ற்றாய்.... எண்ட ராசா.. ஆரப் பாக்க வந்திரிக்காய் அப்பா.. எண்ட புள்ளயக் கொண்டு போயிட்டாங் கனே. கொண்டு பலிகுடுத்திட்டாங் கனே. நான் என்ன செய்வேன். பெத்த வயிறு பத்தி எரியுதே. எண்ட மகனே... நீ எங்கடா போயிட்டாய்... இனி எப்படா உன் னப் பாப்பன். அம்மா வாறாங்க ளம்மா பயமா இரிக்கம்மா எண்டு எண்ட புள்ள என்க்குப் பின்னால ஒளிஞ்சானே.. கொண்டுபோயிட்டா ங்களே... சறசற எண்டு இழுத்துக் கொண்டு போனானே... அங்க பார ப்பா. எண்ட புள்ள துவக்குச் சுட்டு விளையாடின வாழமடல் இன்னும் வாடயில்ல. அதுக்குள்ள அவன் ஒழி ஞ்சுபோயிட்டானே.. நான் என்ன செய்வேன்..."

அக்கா ஆதவனின் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஒப்பாரி வைக்கின்றா. என்னால் தாங்கமுடியவில்லை. என் அறைக் குள் சென்று மேசையிலுள்ள பேனா வையும், பேப்பரையும் எடுத்து எதையோ எழுதத் தொடங்குகி றேன்.

பெத்தாவின் ஒப்பாரிச்சத்தம்

www.tamilarangam.net

கேட்கின்றது. பெத்தாவின் வயது டைய யாரோ வந்திருக்கின்றார்கள் என்பதை உணர்ந்த நான் எட்டிப் பார்க்கின்றேன்.

கந்தவனம் வட்டவிதானையா ரின் மனைவி காசாத்தை பெத்தா வின் ஒப்பாரி அரவணைப்பில் சிக் கித் தவித்துக்கொண்டிருந்தா.

"எண்ட மெச்சியே.. எண்ட புள் ளயக் கொண்டு போயிட்டாங்களே. எண்ட மெச்சியே கெல்லுல நெல்லு முளைச்ச மாதிரி ஒண்டே ஒண்டு அதக்கொண்டு கண்காணாத இடத் துல பலி குடுத்தானுகளே.. எண்ட மெணம் பெத்துதே..."

"என்ன செய்யுற போடியார் பெண்டில். அந்தப் புள்ளர எரிசி அவ்வளவுதான். உட்டுப்போட்டு எழும்பி தலையில தண்ணிய வார் த்து எதையும் கெரைச்சி குடிகா" பெத்தாவுக்கு ஆறுதல் சொல்கி ன்றா காசாத்தை மனுசி.

"ம்.. என்னால ஏலாது தாயே. எத எடுத்தாலும் தாயே எண்டபுள் ளதானே தெரியிறான்"

"என்ன செய்யுற.. கெலியுகம் முத்திப் போயிற்றுகா. இல்லாட்டி முலப்பால் குடிமறக்காத புள்ளைக் கெல்லாம் ஆயுதம் குடுப்பானுகளோ"

"அதுதானே மெச்சி. இந்த நாடொன்றுதான் என்ன பாட்டப் படுகுது"

எழுதிக்கொண்டிருந்த நான் கிழவிகள் இருவரின் சம்பாசணை யில் கூர்மையான கவனம் செலுத்து கின்றேன். வாசலில் நிற்கும் தென் னையில் ஆதவன் சாய்ந்து நிற்கின் றான்.

"ம்.. என்னமோ நடக்குறது நடக்கட்டும். நமக்கு இன்னும் செண்ட காலாம் செல்லாது. இந் தப் புள்ள குட்டிகள்தான் என்னெ ண்டு தப்பப் போகுதுகளோ தெரி யாது. நான் வாறன்"

"என்னெண்டு தப்புற. இந்த அட்டூழியக்காரருக்கிட்ட இரிக்காம எல்லாரும் கடல்ல போய் உழுந்து சாகிறாதான். அங்கையும் நிம்மதி யாய்ச் சாக உடுறானுகளோ என் னவோ ஆருகண்டா"

காசாத்தை மனிசியை வார்த் தைகளால் வழியனுப்பி வைத்து விட்டு மீண்டும் வானத்தைப் பார்த் துக்கொண்டு படுக்கிறா பெத்தா.

"சத்தி சங்காரியே. ஆயிரம் கண்ணாளே நீதான் தாயே கேளு" பெத்தா தன்பாட்டில் சாபம் கொடு க்கின்றா.

ஆதவன் என் முகத்தைப் பார்க் கின்றான். "ம் என்ன உலகம்.

www.tamilarangam.net

பாச்சி புடிச்சி பால் குடிக்கத் தெரியாததுகளெல்லாம் கண்ணி வைக்குதுகளாம். மூத்திரம் பெய்யத் தெரியாததுகளுக்கு காட்டுக்குள்ள பயிற்சியாம். எடியே புறக்கிற புள்ள கெவனம். அதுக்கும் துவக்கக் குடுத்திருவானுகள்" சா வீட்டுக்கு வந்திருக்கும் பக்கத்து வீட்டுப் பிள்ளையிற்றுக்கார கோணேலைப் பார்த்து பெத்தா கூறுகின்றா.

"உனக்கு வேற வேலையில்லையோகா. தேவையில்லாமல் அலட்டிக்கொண்டிருக்காய். அறிஞ்சாங்களோ உன்னக் கொண்டு போயிடுவாங்கள்" இளையக்கா பெத்தாவுக்கு பயம் காட்டுகின்றா.

"அதாருடி அது என்னக் கொண்டு போறளவுக்கு தைரியமானவன். வரச்சொல்லு. பாப்பம் அவங்கள"

"எலக்கோ, தேவையில்லாத கதையள் கதைச்சி அனியாயமா சாகப்போறியோ" முத்தக்காவின் மூத்த மகன் பெத்தாவிடம் கேட்பது கேட்கின்றது.

"இஞ்ச ஆரும் உலகாள வரயில்ல புள்ள. எல்லாரும் சாகத்தான் வந்திருக்கம். அப்பிடி அவங்கட கையாலதான் சாவெண்டால் அத ஆரால தடுக்கேலும். ஆனா நான் சாகக்குள்ளையும் ரெண்டு கேள்வி கேட்காமச் சாகமாட்டன். இது சத்தியம்"

ஆதவன் என் முகத்தை நிமிர்ந்து பார்க்கின்றான். "பெத்தாவைப்

---

ஏப்ரல் மாத

# *இரவல் தூண்டிலில்...*

✳ " கண்ணைக் குத்தும் கை "

*பெண்களுக்குப் பெண்களே எதிரியா? என்று தெரிவிக்கப்படும் கருத்துகள் பற்றி எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன்.*

www.tamilarangam.net

போல படிக்காத சனங்களுக்கே கேள்வி கேட்க வேண்டுமென்ற தையிரியம் வந்திருக்கு. இனி யென்ன"

ஆதவன் ஆச்சரியத்துடன் சொல்லுகின்றான்.

"அப்ப இனிமேல் மற்றவங்களுக்கும் தையிரியம் வருமெண்டு நினைக்கிறயோ. சும்மா விசர்க் கதை கதையாத. பதவியும், பணமும், வசதியளும் பறிபோய்விடும் என்ற பயம் ஆருட்ட இருக்கோ அவங்க ஒருநாளும் கேள்வி கேட்க மாட்டாங்க. அது ரெண்டும் பெத்தாகிட்ட இல்ல. அதுதான் அவ தைரியமாக் கதைக்கா" நான் ஆதவன் மேல் சீறிப் பாய்கின்றேன்.

ஆதவன் என் மேசைமேல் இருக்கின்றான். வெளியில் அக்காமார்களும், பிள்ளைகளும் இருக்கின்றார்கள். பெத்தாவுக்கு நித்திரை போல் தெரிகின்றது. சத்தத்தைக் காணவில்லை.

இளையக்காவின் கடைசிமகன் அக்காவின் மடியில் படுத்துக் கொண்டு சிணுங்குகிறான். பசிக் களை அவனின் முகத்திற் தெரிகிறது. மகனை அணைத்து முதுகைத் தடவிக்கொண்டிருக்கும் அக்காவின் முகத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கின்றது.


எழுபத்தியோராம் ஆண்டு அண்ணன் கடலில் தாண்டு செத்தபோது ஒருமாதம்வரைக்கும் வீட்டில் சமைக்க முடியாதளவுக்கு உறவுக்காரர் வீட்டிலிருந்து புட்டென்றும், சோறென்றும் வந்துகொண்டே இருந்தது. ஆனால் இன்று ஒருநேரச் சாப்பாடுகூட ஒருவராலும் கொடுக்கமுடியாத நிலைமை. ஊரெல்லாம் சா வீடென்றால் யாருக்கு யார் துக்கச் சாப்பாடு கொடுப்பது. முன்பெல்லாம் சாவென்பது வாழ்வில் ஒருநிகழ்வு இப்போது சாவே வாழ்வாகிவிட்டதே. இதற்கு யார் யாரை நோவது.

அக்காவின் மகன் இப்போதும் பசியால் சிணுங்குகின்றான். மகனை இழந்த வேதனையில் துடித்துத் துயரப்பட்டு அழுது புலம்பிய சோர்வால் மூத்தக்கா கண்ணயர்ந்து தூங்குகின்றா. திடீரென ஒரு பலத்த பயங்கரமான வெடிச்சத்தம் கேட்கிறது.

மேசையில் இருந்த ஆதவன் குதித்து கீழே இறங்குகின்றான். சிணுங்கிய மகன் அக்காவின் கழுத்தை கட்டிப் பிடிக்கின்றான். மருமக்கள்மார் ஒவ்வொருவரும் மூலைக்கு மூலை ஒதுங்குகின்றனர்.

படுத்திருந்த பெத்தா முந்தானையையும் உதறித் தட்டிக்கொண்டு எழும்பி றோட்டுப் பக்கம் போகின்றா. பெத்தா நறுவிழியடிக்குப்

www.tamilarangam.net



போகின்றா என்பது எனக்குத் தெரியும். என்ன நடந்தது என்பதை எப்படியும் பெத்தா அறிந்துவிடுவா இன்னும் கொஞ்ச நேரத்தின்பின் எப்படியும் பெத்தாவின் மூலம் விச யத்தை அறிந்துவிடலாம்.

நான் நினைத்துக்கொண்டே ஆத வனைப் பார்க்கின்றேன். அவனும் என்னையே பார்க்கின்றான். பயத் தினாலும், பசியினாலும் வெளிவி றாந்தை அமைதியாகவே இருக் கின்றது.

பெத்தா போய்க் கனநேரமா ச்சி. இன்னும் வரவில்லை.

திடீரெனத் தூரத்தில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்கின்றன. தொடர்ச்சியாக தீர்க்கப்படுகின்ற வேட்டுச்சத்தங்கள் அவை.

றோட்டால் மூன்று, நான்கு மோட்டடைபக்குகள் மிக விரைவா கச் செல்லுகின்ற சத்தம் கேட்கின் றது.

"எண்ட மக்காள் வெளிக்கிறங் குங்கோடி மக்காள். அந்தா சுட்டு வாறானண்டி. என் தலையே.. நான் என்ன செய்வேன் இந்தப் புள்ளகுட் டிகளோட..." பதறித் துடித்து ஓடி வந்த பெத்தா வாசலில் நின்று கொண்டு தலையில் பாய்ந்து அடிக் கின்றா.

"ஏலக்கோ ஏங்கா பாய்ஞ்சி பாய்ஞ்சி அடிக்காய் என்ன நடந்த தாம் எண்டு சொல்லன்" இளைய க்கா கேட்கின்றா.

www.tamilarangam.net

"எடியே அத ஏண்டி கேக்காய். அக்கரபத்து விசாரய இவங்க வெடிவைச்சி உடைச்ச சத்தம் தானாண்டி இந்தா கேட்டது. அவங்க புதுனம் காட்டிப்போட்டு மோட்டச் சைக்கிலில ஒடுறாங்க. அவன் அறுதலிப்படைக்காறன் அக்கரப்பத்து ஊருக்குள்ள பூந்து எல்லாரையும் சுட்டுவாறாண்டி.... எடியே என்னடி இருக்கிற.. ஒழும்புங்கோவண்டி போக... எடே பொடியனுகாள் என்னடா செய்யுறயள்.. ஊட்டுக்குள்ள வெட்டக்கிறங்கி எங்கண்டான ஒடுங்கவன்டோ"

பெத்தா எங்களைப் பாத்துக் கத்துகின்றா. இப்போதும் வெடிச் சத்தங்கள் கேட்கின்றன. புறப்படுவதற்கு அக்கா பிள்ளைகள் எல்லோரும் ஆயத்தமாவது விளங்குகின்றது. என் உடல் பயத்தால் நடுங்குகின்றது. முழங்கால்களுக்குக் கீழ் சக்தியற்றுவிட்டது போன்ற ஒரு பிரமை. ஆயிரம் சுத்தியல்கள் கொண்டு ஓங்கி அடிப்பது போன்று இதயத்தில் ஒரு பலவீனம். நான் ஆதவனைப் பார்க்கின்றேன். ஆதவன் என்னைப் பார்க்கின்றான்.

"எண்ட அம்மோ... அம்மோ... எண்ட அம்மோ.."

"அக்கோ.. அக்கோ.."

"எண்ட மகளே.. எண்ட மகளே.. இதென்ன கெதியிடி மகளே.."

இளையக்காமார், பிள்ளைகள், பெத்தா எல்லோரும் ஒன்றுகூடி ஓலமிடும் சத்தம் திடீரென வெளியில் கேட்கின்றது. நானும், ஆதவனும் விறாந்தைக்கு ஓடி வருகின்றோம்.

எல்லோரும் தலையில் பாய்ந்து அடித்து அழுது புலம்புகிறார்கள். பெத்தாவின் மடியில் முத்தக்காவின் தலை நிமிர்த்திச் சாய்த்து வைக்கப்பட்டிருக்கிறது. நான் அக்காவைப் பார்க்கின்றேன். அக்காவுக்கு எதுவும் தெரியாது. அக்கா போய்விட்டா. மகளை இழந்த வேதனையில் படுத்த அக்காவின் காதுகளுக்கு மீண்டும் ஒரு பயங்கரச் சம்பவம் பற்றிய குரல் கேட்டதில் அதிர்ச்சியடைந்து மூச்சி தானாகவே பிரிந்துவிட்டது.

"எண்ட மகளே.. நீ போயிற்றாயோ மகளே.. மகள் போன இடத்துக்கு நீயும் போயிற்றயோ மகளே.." பெத்தா ஒப்பாரி வைக்கின்றா.

நான் சிலையாக நிற்கின்றேன். என்னால் அசையவோ அழவோ முடியவில்லை. ஆதவன் தென்னையில் சாய்ந்துகொண்டு நிற்கின்றான்

வெடிச்சத்தம் இப்போதும் கேட்கின்றது. அது நெருங்கிக் கொண்டு வருவது தெரிகின்றது.

www.tamilarangam.net

"எடே பொடியனுகாள்.. ஏன்டா நிக்கயள். ஒடுங்கோவண்டா" பெத்தா கத்துகின்றா.

"மாமா போங்க மாமா. எங்கண்டான ஒடுங்கோ மாமா" விம்மி விம்மி அழுதுகொண்டு என்னிடம் சொல்லுகின்றனர் என் மருமக்கள்மார்.

வெடிச்சத்தம் நெருங்குகின்றது.

"எண்ட தம்பியே, உன்னக் கும்பிட்டனப்பா. அவனக் கூட்டிக்கொண்டு ஓடப்பா" இனையக்கா ஆதவனைக் கெஞ்சுகின்றா.

ஆதவன் என் கைகளைப் பிடித்து இழுத்துக்கொண்டு நடக்கின்றான். என் கால்கள் அவன் பின்னால் செல்கின்றன. திரும்பிப் பார்க்கிறேன். மூத்தக்கா... என் மூத்தக்கா பெத்தாவின் மடியில் படுக்கின்றா..

அக்கா உன் மகன் போன இடத்துக்கு நீ போய்விட்டாய். நீ போன இடத்துக்கு நானும் வரப் போகின்றேன் என்பது நிச்சயம்... நினைத்துக்கொண்டே ஆதவனின் பின்னால் செல்கின்றேன். வெடிச்சத்தம் நெருங்கிக்கொண்டிருக்கின்றது.

அக்கா...
கட்டிய கணவனை இழந்து, பெற்ற பிள்ளையை இழந்து... இனி இழப்பதற்கு எதுவுமின்றி உன்னையே நீ இழந்துவிட்டாய். உன் உடலுக்குச் செய்யவேண்டிய இறுதிக்கடனைக்கூட செய்ய முடியாமல் இந்த உடன்பிறப்புத் தவிக்கின்றான். எத்தனையோ ஆண் சகோதரங்களோடு பிறந்த உன்னைத் தூக்கிச் செல்ல ஒரு ஆண் துணைகூட இல்லாமல் அநாதைப் பிணமாக...

இல்லை... நீ அநாதையில்லை. உன்னைச் சூழ உன் சகோதரங்களும், மற்றப் பிள்ளைகளும் இருக்கிறார்கள். நம்மையெல்லாம் பெற்றெடுத்த விருட்சத்தின் விதையான நம் பெத்தா உன் அருகில் இருக்கின்றா. ஆனால் இன்று ஒவ்வொரு தெருவீதிகளிலும் கிடக்கின்ற சவங்கள் எத்தனை.. நடு ஆற்றில் மிதக்கின்ற பிணங்கள் எத்தனை.. இவைகளுள் என் தமக்கையைப் போல.. என் தாயைப்போல எத்தனைபேர் கிடப்பார்கள்.. அநாதைப் பிணங்களாக.. ஒரு சுடுகாட்டினை, ஆளவேண்டுமென்ற ஆசைகொண்டு அநியாயங்களைச் செய்கின்ற சுயநலப் பேய்களின் அராஜகங்கள் அடங்காதவரை பிணங்களின் எண்ணிக்கை...

நடந்து சென்ற நானும், ஆதவனும் நறுவிழியடியில் நிற்கின்றோம்.

அக்காமார், மருமக்கள்மார்,

www.tamilarangam.net

பெத்தா... இவர்களின் ஒப்பாரிச் சத்தம் என் காதுகளுக்குக் கேட் கின்றது.

ஊரிலுள்ள எல்லோரும் ஓடுகின் றார்கள். ஆனால் எங்கென்று அவ ர்களுக்கே தெரியாது. நெருங்கிக் கொண்டிருக்கும் வெடிச்சத்தத்தில் என் வீட்டு ஒப்பாரிச்சத்தம் கேட் காமல் போய்விட்டது.

ஆதவன் என் கைகளைப் பற் றிக்கொண்டு நடக்கின்றான். நானும் பின்னால் செல்லுகின்றேன். எங்கு போகின்றோம் என்றோ, போகலாம் என்றோ எங்களுக்கும் தெரியாது.

- வி.கமல்

முன்னட்டை:

ஜோதிர்லதா கிரிஜாவின் "நான் ஒன்னும் நளாயினி இல்லை" என்ற நாவலின் முகப்பு.

பெண்கள் சக்தி அவர்களைக் கட்டி வைத்திருக்கும் தளைகளைப் பொசு க்கியெழும்.

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

3.மாகாண போக்குவரத்துச்சபை



4.மக்கள் மயப்படுத்தல்!



www.tamilarangam.net

# உலகப் பொலிஸ் வேண்டுமா ?

யூகோஸ்லாவிய தேசிய இனங்களுக்கிடையிலான மோதல்களைத் "தீர்த்து" வைக்க ஐக்கியநாடுகள் சபையின் "சமாதானப்படை" சென்றுள்ளது.

எல்சல்வடோரின் நீண்டகால உள்நாட்டுப் போரை "முடிவுக்குக்" கொண்டுவர ஐ.நா.சபையின் ச.படை சென்றுள்ளது.

சோவியத் யூனியனில் இணைந்திருந்த நாடுகளின் தேசிய இனங்களைக் "காப்பாற்ற" ஐ.நா.சபையின் ச.படை செல்லவேண்டுமென கோரிக்கைகள் எழுந்துள்ளன.

'நீலத் தொப்பி' இராணுவம் என்றழைக்கப்படும் ஐ.நா.சபையின் ச.படைக்கு உலகெங்கினும் சமாதானத்தை நிலைநாட்டுவதில் அப்படியென்ன அக்கறை?!

"அமைதிப்படை" என்ற பெயரில் இலங்கைக்குள் இந்திய இராணுவம் வந்து இந்திய அரசின் நோக்கத்தை எப்படி நிறைவேற்ற முயன்றது என்பதில் எமக்குப் படிப்பினைகள் உண்டு. அப்படியாயின் வறியநாடுகளைச் சுரண்டிக் கொழுக்கும் அமெரிக்க, மேற்கைரோப்பிய இராணுவங்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ள ஐ.நா.சபையின் ச.படை ஒரு நாட்டுக்குள் புகுந்தால் யாரின் நோக்கங்கள் நிறைவேறும் என்பதும் வெளிப்படையே.

ஆயுத விற்பனையில் முதன்மை வகிக்கும் அமெரிக்க, மேற்கைரோப்பிய நாடுகளுக்குள் நுழைந்து, முழு உலகுக்குமே அச்சுறுத்தலான அணு, உயிரியல், இரசாயன ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படுவதை இந்த ஐ.நா. சபையின் ச.படை அழிக்காது.

அமெரிக்கா பனாமாவுக்கும், பிரிட்டன் போக்லாந்துக்கும், பிரான்ஸ் சார்ட்டுக்கும் படையெடுத்துப் போய் தமது ஆதிக்க வெறியைக் காட்டும் போது இந்த ஐ.நா.சபையின் ச.படை தடுக்காது.

மூன்றாமுலக நாடுகளில் கிளர்ந்தெழும் விடுதலைப் போராட்டங்களை நசுக்க அந் நாடுகளின் அரசுகளுக்கும், எதிர்ப்புரட்சிகர சக்திகளுக்கும் முதலாளித்துவ, ஏகாதிபத்திய நாடுகள் ஆயுத-நிதி உதவி வழங்குவதை

இந்த ஐ.நா.சபையின் ச.படை கண்டுகொள்ளாது.

ஆனால், விடுதலைப் போராளிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையவும், ஆயுதப் போராட்டத்தை பாராளுமன்றத்திற்கான சமரசமாக்கவும், போராளிகளையும், அரசுகளையும், தமது தலைமைத்துவத்தின் கண்காணிப்பின் கீழ் வைத்திருக்கவும் ஐ.நா.சபையின் ச.படை வந்துவிடும்!

தம்மால் விதிக்கப்பட்ட தடைகளால் உண்டான பட்டினி, நோய், வறுமை காரணமாக ஈராக்கில் தொடர்ந்தும் பல ஆயிரக்கணக்கில் பச்சிளங் குழந்தைகள் இறந்து கொண்டிருப்பதைப் பற்றியோ, ஈராக் பகுதிகளிலிருக்கும் குர்திஷ் மக்கள் துருக்கி, ஈரான் அரசுகளால் குண்டுவீசி கொல்லப்படுவதைப் பற்றியோ அலட்டிக்கொள்ளாத ஐ.நா.சபை, சதாம் முழு ஆயுதங்களையும் அழிக்க அனுமதிக்காவிடின் மீண்டும் போர் தொடுக்க வேண்டிவரும் என ஆணவமாகக் கூறுவதுதான் "சமாதானம்" பற்றிய ஐ.நா.சபையின் உண்மை விளக்கமாகும்.

மக்கள் பலத்துடன் முன்னெடுக்கப்படும் விடுதலைப் போராட்டங்களுக்கு இந்தப் பொலிஸ்காரர்களின் "தயவு" தேவைப்படாது.


# தூண்டில்

மார்ச்-ஏப்ரல் 1992

கலம்: 50

ஆசிரியர்குழு: கடலோடிகள்



✉: THOONDIL
Südasien Büro
Grosse Heim Str. 58
46oo Dortmund 1
Germany

☎: (o231) 13 66 33
*(திங்+வெள்ளி: 16.00-21.00 மணி புதன்: 14.00-18.00மணி)*


## சந்தா

ஜேர்மனி : 6மாதங்கள்=20,-டி.எம்
: 1 வருடம் = 38,-டி.எம்
ஐரோப்பா : 6மாதங்கள்=25,-டி.எம்
1 வருடம் = 48,-டி.எம்
அமெரிக்கா,
ஆபிரிக்கா,
ஆசியா : 1 வருடம் = 65,-டி.எம்
ஒஸ்ரேலியா: 1 வருடம் = 75,-டி.எம்

தபாற்கணக்கு இல. 308 074 68
Postscheckamt Dortmund
BLZ 44o 1oo 46

*சஞ்சிகை வளர்ச்சிக்கான உதவிகளில் ஒன்றாக உங்கள் சந்தா நிதியை அனுப்பி வைத்ததும் எமக்கு கடிதம் மூலம் அறிவியுங்கள்.*



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்